விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 ஆவணி 8 ஜுல்கஃ 17 இதழ் 195
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (24—8—86)

## வசாவிளான் மினி முகாம் வாபஸாவது உறுதி!

சுன்னாகம், சனி

ஏற்கனவெ அறிவித்திருந்ததுபோல் வசாவிளானிலுள்ள மினி ராணுவமுகாம் அடுத்தவாரம் இறுதியுடன் வாபஸ்பெறப்பட்டு விடலாம் என் நம்பகமாகத் தெரியவருகின்றது.

வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நிலை கொண்டுள்ள ராணுவத்தினரை அடுத்ததவணைக்கு பாடசாலை ஆரம்பமாகும் சமயத்துக்கு முன்னதாக வாபஸ் பெற்றுக்கொள்வதாக முன்னைய ராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் எச். எஸ். ரூடசிங்க மயிலிட்டியைச்சேர்ந்த சில பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் குழுவுக்கு முன்னர் உறுதியளித்திருந்தது தெரிந்ததே.

இது தொடர்பாக இருதினங்களுக்குமுன் வசாவிளான், காங்கேசன்துறை, மயிலிட்டி பிரஜைகள் குழுத்தலைவர்களும், (11ம் பக்கம் பாரக்க)

# கூட்டணி - அரசுக்கிடையில் விரைவில் உடன்பாடு ஏற்படும்

## ஜனாதிபதி நம்பிக்கை

(கொழும்பிலிருந்து நமது நிருபர்)

**இனப்பிரச்னை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணிக் குழுவினருடன் நடைபெறும் பேச்சுக்களின் இறுதியில் ஒரு உடன்பாடொன்று அரசுக்கும் கூட்டணிக்கும் இடையில் விரைவில் ஏற்பட வாய்புக்கள் உள்ளன.**

இவ்வாறு ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தன அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்ததாகதகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கூட்டணிக்குழுவினருக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளன

பல்வேறு விடயங்களில் பூரண உடன்பாட்டுக்கு இருபகுதியினரும் இணங்காமையே பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கு காரணமாகவுள்ளது.

காணிகுடியேற்றம், சட்டம், ஒழுங்கு போன்ற சிலவிடயங்களில் சில கருத்து வேற்றுமைகள் நிலவுவதாக அறியப்படுகிறது.

நடைபெற்ற இறுதிச் சுற்றுப் பேச்சுக்களில் அரசியல் அமைப்பு விவரங்கள் குறித்து ஆரயப்பட்டன. (கூ-எ)

### "பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்"

கொழும்பு, சனி

'இனப்பிரச்னைக்குத் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கான அரசியல் யோசனைகள் அடுத்தமாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்' என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனபுலத் சிங்களவில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

மேலும் அவர் அங்கு பேசுகையில், 'தேர்தல் ஒன்றைநடத்தும் எண்ணம் 1989-ம் ஆண்டு வரை இல்லை என்பதால் மக்கள் அரசின் இந்த நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தார். (எ)

## தீவிரவாதத் தலைவர்களுடன் பேச
## உயர்மட்ட அமைச்சர்கள் குழு புதுடில்லி செல்லும்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

இந்தியாவிலுள்ள தமிழ்த் தீவிரவாதக்குழுக்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக இலங்கை அரசின் அமைச்சர்கள் சிலர் உட்பட உயர்மட்டக்குழுவொன்று மிகவிரைவில் புதுடில்லிக்குச் செல்லவிருப்பதாக "சட்டர்டேறிவியு" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

இந்தவாரம் முடிவடையவிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடனை பேச்சுவார்த்தைகளை யடுத்து மேற்படி விடயம் குறித்து ஒரு முடிவு எடுக்கப்படவிருக்கின்றதாம்.

பெரும்பாலும் நிதி அமைச்சர் திரு. றொனிடிமெல் தலைமையில செல்லவிருப்பதாக கருதப்படும் அவ்வுயர்மட்டக் குழுவில் கல்வி அமைச்சர் திரு. ரணில்விக்கிரமசிங்கா, நீதியமைச்சர் டாக்டர்நிஸங்க விஜயரட்ண, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸ்ஸநாயக்கா முதலியோர் இடம்பெறலாம் என் ஹேஸ்யம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இறுதிச்சுற்றுப்பேச்சில்—
## கோட்டைமுகாமை அகற்ற கூட்டணிக்குழு கோரும்

யாழ்ப்பாணம் ஞாயிறு

அரசாங்கத்துக்கும் கூட்டணியனருக்கும் இடையே தற்போது நடைபெற்று வரும் பேச்சுக்களின் இறுதிச் சுற்றின் போது, கோட்டைமுகாமிலிருந்து ராணுவத்தை அகற்றுமாறு ஜனாதிபதியிடம் கூட்டணியினர் வலியுறுத்தவுள்ளனர்.

யாழ். மாநாகரவரியிறுப்பாளர் சங்கத்தின் தூதுக்குழுவொன்று அதன் உபதலைவர் திரு ம அலோசியஸ் தலைமையில் கூட்டணியினரை கொழும்பில் சந்தித்தபோதே தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ். கோட்டையிலுள்ள ராணுவத்தினரால்யாழ் மாநகரசபை அப்பகுதியில் இயங்க முடியாதுள்ளதெனவும், யாழ். ஆஸ்பத்திரி நீதிமன்றம், பாடசாலைகள், பஸ்நிலையம் சந்தை மற்றும் கோட்டைப் பகுதியிலுள்ள ஸ்தாபனங்கள் இயங்க முடியாமல் இருப்பதனையும் இவர்கள் கூட்டணியினரிடம் எடுத்துக் கூறினர்.

இவற்றைமிகவும்அவதானத்துனன் கேட்டறிந்த கூட்டணியினர் இறுதிச் சுற்றுப்பேச்சுக்களின்போது கோட்டைராணுவத்தினரைஅங்கிருந்து அகற்ற வேண்டுமென்ற யாழ் நகரவரியிறுப்பாளாசங்கத்தில்வேண்டுகோளை ஜனாதிபதியிடம் சமர்பிப்பதாக உறுதியளித்துள்ளார்.

அத்துடன் தமிழ் மாவட்டங்களில் கடல்வலயச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் கடற்றொழிலாளர்கள் பகல் நேரத்திலாவதுதமதுதொழிலை மேற்கொள்ள சட்டத்தைத் தளர்த்துமாறு ஜனாதிபதியிடம் கோருமாறும் கூட்டணியிடம் வலியுத்தப்பட்டது [ஊ]

### பாலம் தகர்க்கப்பட்டது

வவனியா, சனி

கிளிநொச்சி 4-ம் வாய்க்கால் பகுதியிலுள்ள பாலம் ஒன்று நேற்று அதிகாலை குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. [மா)

## 27-ல் யாழ். நகரில் மௌன ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் நகரில் வாழும் மக்களுக்கு உயிராபத்து நேராதிருக்கும் முகமாக யாழ்ப்பாணம் இராணுவ முகாமை அகற்றக்கோரும் பிரமாண்டமான மௌனஊர்வலம் ஒன்று இம்மாதம் இருபத்தேழாம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இவ்மௌன ஊர்வலம் எதிர்வரும் புதனன்று காலை யாழ்ப்பாணம் புகையிரத நிலைய முன்றலில் இருந்து புறப்பட்டு யாழ் செயலகத்தில் மகஜர் கையளிப்பதுடன் நிறைவு

(12ம் பக்கம் பார்க்க)

## போராளிகளுடன் இந்திய அரசு ஆராயும்

புதுடில்லி ஆகஸ்ட் 23

போராளிகள் குழுத் தலைவர்களுக்கும் இந்தியஅரசின் உயர்மட்டக் குழுவினருக்கும் இடையில் மீண்டும் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

(11ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் இழப்புகளுடன் முகாமுக்குள் சென்றது
### புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து புறப்பட்டு ரோந்து வந்துகொண்டிருந்த இராணுவத்தின்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதைத் தொடர்ந்து பாரிய இழப்புகளுடன் முகாமுக்குள் இராணுவம் புகுந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இத்தாக்குதல் சம்பவம்

(11ம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படையினரால் 200 ஆண்கள் கைது

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாநகரசபை பிரதேசத்திலுள்ள மாமாங்கம், அமிர்தகழி பகுதிகளை நேற்றுக் காலை முற்றுகை

(11ம் பக்கம் பாரிக்க)

## திருமலையில் அரச ஊழியர் இருவர் சுட்டுக்கொலை

(மூதூர் நிருபர்)

திருமலை மாவட்டத்திலுள்ள ஒரு கிராம சேவை அலுவலரையும், காணி உத்தியோகத்தர் ஒருவரையும் இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கியால் சுட்டுக்கொன்ள்ளனர்.

கும்புறுப்பிட்டிகிராமசேவை அலுவலர் பி. நடராசா (46 வயது) என்பவர் நேற்றுக் காலை சைக்கிளில் செல்லும் பொழுது 10ம் கட்டையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர் நிலாவெளி ப. நோ கூ. சங்கத்துக்கும் தலைவராவார்.

(11ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

சில்லறைக்கடைத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு 71, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [C 4218]

10 நிமிடங்களில்கலவையை ஐஸ்கிறீமாக பெற்றுக்கொள்ளக்கூடிய ஐஸ்கிறீம் மெஷின் விற்பனைக்குண்டு. 81, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் (C 4184)

மானிப்பாய் மேற்கில் வீடும், வளவும், வெறும்காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ஜீவன் ரவல்ஸ், 9 00-12 00 மணிவரை யாழ் பஸ் நிலையத்திற்கு முன்பாக நவீன சந்தை, மேல்மாடி. [C4199]

சகலவசதிகளையும் உடைய ஒரு பரப்புக்காணி கீழே குறிப்பிடும் முகவரியில் உடனடியாக விற்பனைக்கு உண்டு எஸ்.என்.ராஜவேல், இல 78, கேசாவில்பிள்ளையார் வீதி. பத்திரகாளிகோவிலடி, வண்ணார்பண்ணைமேற்கு, யாழ்ப்பாணம். (பத்திரகாளிகோவிலுக்கு முன்னால்) [C 4219

CIFAN EGG CENTRE சிகப்பு முட்டை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுகொள்ளலாம். உடைந்த முட்டைகள் குறைந்தவிலையில் கிடைக்கும். 111, முஸ்லிம் கல்லூரி வீதி, (ஒஸ்மனியா கல்லூரி அருகில்], யாழ்ப்பாணம்' (C4227)

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, சுத்தமானது, தரமானது சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

பொன்னாலையில் சகாயவிற்பனை 28-8-86ல் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேர்த்திருவிழாவில் மில்க்வைற் விளம்பர விற்பனை வாகனத்தில் ரூ 15/-ற்கு எமது தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும், மில்க்வைற் செய்தியும் அறிவுநூல்களும், கீரை விதைப்பைகற்றும் அன்பளிப்பாக கொடுக்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்குகொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். [C1171]

நவீன உபயோகித்தவீட்டுத் தளபாடங்கள். T. V, டெக், சிங்கர் தையல்மெஷின், மின்விசிறி, Bath Tub, தொட்டிகள், Baby Cot, Imported T. V. Stand, Pyrex, கிளாஸ் வகைகள், பித்தளை பொருட்கள், Show case, கண்ணாடி மேசைகள், Gas அடுப்பு, எழுதுமேசைகள், கட்டில் மெத்தைகள், புத்தக அல்மாரி ரீசெற், எலக்ரிக் குக்கர், பெற்ரோமாச், கேற்றல், நேசறிஉபகரணங்கள் மற்றும்பல உடன் விற்பனைக்குண்டு. M Thiagarajan, 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C4217)

## FOR SALE

Boy's Hero Bicycle, Belling Cooker with oven and Grill, Iron safe, Akai Video Deck (needs repair) Yashica 1- 0 Camera, Kodak-100 Camera with Flash, Guitars, love birds. Contact: No 14 Columbuthurai Road, Chundikuli. (C 4188

## தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதைகள் தொகையாகத் தேவை. தொடர்பு கொள்ளவும்: மில்க்வைற், யாழ்ப்பாணம். (A 1170)

வீடு கட்டக்கூடிய 1 பரப்புக் காணி யாழ் மாநகர சபை எல்லைக்குள் உடன் தேவை, விபரங்களுக்கு: விளம்பர இல. C 4216 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். [C 4216]

1-1½ வயதிற்கு இடைப்பட்ட சுத்தமான J.C இனப் பசுக்கன்றுகள் தேவை. 12ற்கு மேற்பட்ட பால் கொண்ட மாட்டுக் கன்றுகள் உள்ளோர் மட்டும் விண்ணப்பிக்கவும். விபரங்களுக்கு: செ. நித்தியானந்தன், நவாலி வடக்கு, மானிப்பாய் (C 4226)

அனுபவமுள்ள பிளேட்டின் மெஷின் மைன்டரும் வேலை பழக ஆர்வமுள்ள இளைஞரும் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் நேரில் சமுகந்தரவும்: தேவி அச்சகம், 114/19, நாவலர் வீதி - யாழ்ப்பாணம். (C 4197)

புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் காமன் ஸ்தாபனத்திற்கு சகல தையல் வேலைகளும் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. திங்கள், புதன், நாட்களில் காலை 10 00க்கும் 12 00க்குமிடையில் கீழ்க் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்: இல 426, கில்னர் லேன், யாழ்ப்பாணம். (கில்னர் பில்டிங் அருகாமையிலுள்ள ஒழுங்கையில்) (C 4228)

யாழ்நகரிலுள்ளசமூகசேவை நிறுவனத்தின் நூலகத்திற்கு பகுதிநேர ஊழியர்கள்தேவை. வேலைக்குத் தகுந்த ஊதியம் வழங்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சேவை மனப்பாங்குள்ளவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 4220 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C-4220)

## சேவை

யாழ். நகரில் தெளிவான "போட்டோஸ்ரற்", "ரோனியோ" பிரதிகளுக்கும், தமிழ், ஆங்கில "ரைப்பிங்" வேலைகளுக்கும், 'கிளீன்கட்', 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். [C 4023]

திருமணம் நிறைவேற்றுதல் சிறந்த பொருத்தத்துடனும், வரதட்சணையுடனும் ஒழுங்கு செய்து கொள்ளவும். காணி, வாகனம், கொள்வனவு, விற்பனவு ஒழுங்குக்கும் இன்றே நாடுங்கள்: தர்சினீஸ், அரசடிச்சந்தி, சுதுமலை கிழக்கு, மானிப்பாய். (C 4098)

Typewriters (தட்டச்சு இயந்திரங்கள் Standard portable) வாங்கவோ, விற்கவோ, அல்லது மாற்றவோ, அத்துடன் சிறந்த முறையில் திருத்தியும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். Fudo Enterprises, 39/ 7, மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C 4205)

## மணப்பந்தல்

அரசாங்க பாடசாலையில் ரூபா 1500 மாதவருமானத்தில் பட்டதாரி ஆசிரியையாக கொழும்பில் கடமையாற்றும் உயர்குல இந்து சைவமும் 32 வயதுமுடைய அழகிய பெண்ணுக்கு சகோதரன் தகுந்த மணமகனை தேடுகிறார். சீதனவிபரம் நேரில் பேசிக் கொள்ளலாம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: C-4229 C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். (C-4229)

இந்து வேளாளர் செவ்வாய்க் குற்றமற்ற அரசகூட்டுத்தாபன உத்தியோகத்தருக்கு 26—30 வயதுக்கிடைப்பட்ட ஆசிரியைதேவை. இதோ எம்மிடம் எல்லா இனமத மணமக்கள் இருக்கின்றார்கள். மங்களா ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (C-4225)

## வகுப்புக்கள்

Spoken English புதிய பிரிவுகள். காலை/மாலைநேர வகுப்புகள் ஆரம்பம் 25-08-86 காலை 6-7 மணி. மாலை 6-7 மணி. ஆசிரியர் S B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர் [C 4171]

க பொ. த. [உயர்] 87 ஒகஸ்ட் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு விஞ்ஞான, கலை, வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பகின்றன. 05-09-1986 மொடேண் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. [C4156]

## கல்வி

G C E (O/L இல் கட்டாய பாடமாகியகணிதத்தில் சித்தியெய்தாதவர்களுக்கும், ஆரம்ப அறிவில்லாதவர்களுக்கும் 17 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்குநுணுக்கமான முறையில் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும்

மற்றும் 5 இலிருந்து (O/L), (A/L) சகல பாடங்களும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும், காலை 8-30 மணிக்குள்வீட்டிற் சந்திக்கவும் அல்லது கடிதத் தொடர்பு செய்யவும். ஆறுமுகநாதன், 10, கச்சேரிகிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழி. (C-4222)

## வாடகைக்கு

சின்னக்கடைக் கருகாமையில் சகலவசதிகளுடைய 4 பகுதிகளையுள்ளடக்கிய (Annex வீடும் 3 பிரிவுடைய மேல் மாடியும் வாடகைக்குண்டு சிறிய வேளாள குடும்பம் விரும்பத்தக்கது. 141, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (C4203)

## தவறிவிட்டது

20-08-86 புதன்கிழமை காலை அராலி துறைமுகத்திலிருந்து யாழ் நோக்கி மினி பஸ்ஸில் பிரயாணஞ்செய்த இளைஞர் ஒருவரால் வயோதிகப் பெண்மணி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்ட ஒருபணப்பை திரும்பப் பெறப்படவில்லை. அன்று யாழ் நகரில் நடந்த அசம்பாவிதங்களால்இத்தவறு நிகழ்ந்துவிட்டது. இதில் சம்பந்தப்பட்ட பெண்மணி தயவுசெய்து பின்வரும் விலாசங்கள் ஒன்றிலாவது உங்கள் வசதிக்கேற்ப தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1) பண்டிதர் சோ. தியாகராசபிள்ளை, கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை. (2) குளோபல் கொம்யூனிக்கேஷன், மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (C 4193)

## SALE

Engineering Books and Drawing Instruments for sale. Inspection 4 p m —7 p.m. YMDA, 10, Thiruvalluvar Avenue, Kandemadam, Jaffna. (C 4221)

## WANTED

Jaffna Hindu Vellala father seeks a suitable partner for his son, 34 years of age. Manager of a reputed mercantile firm in Jaffna. Having Mars in the 7-th House. Please forward Horoshope and detail of Dowry available and photograph. (All returnable) in the Ist instance Apply Advt. No 4212. C/o Eelanadu, Jaffna. [C 4212]

## கேள்விப் பத்திரங்கள்

ஆஸ்பத்திரிகளுக்கும், நிறுவனங்களுக்கும் பாண், விறகு போன்ற பொருட்களை விநியோசும் செய்வதற்கும், வாகன சேவைக்குமான கேள்விப் பத்திரங்கள் 1986ம் ஆண்டின் நாலாம் காலாண்டுக்கு விற்பனை அபிவிருத்தி திணைக்களத்தால் கோரப்படுகின்றன. விபரங்களும் விண்ணப்ப படிவங்களும் 8 - 9 - 86 மாலை 3 மணி வரை அலுவலகத்திலும், திணைக்கள ஆஸ்பத்திரி விநியோக கிளைகளிலும் நேரடியாகவோ அல்லது முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையினை அனுப்பி தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் நேரில் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் இடப்படல் வேண்டும். அல்லது 9 - 9 - 86 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கத்தக்கதாக கீழ்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 9 - 9 - 86.

சு. சண்முகரத்தினம்,
பிராந்திய கணக்காளர்.
பிராந்திய கணக்காளர்
அலுவலகம்,
விற்பனைத் திணைக்களம்,
250, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (A 1175)

முற்றிலும் தன்னியக்க இயந்திரங்கள் மூலம் தயாரானது




★ தெய்வீகமானது
★ உருகாது
★ கருகாது
★ நெடுநேரம் எரியக்கூடியது
★ பிரகாசமானது

(A-768)

## இன்று விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு மறவன்புலோ சிவகவி சனசமூக நிலைய வருடாந்த இல்ல மெய்வல்லுனர்போட்டி இன்று மேற்படி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



சண்முகநாதன் பிரபாகரன்
அன்னைமடியில்:- 9-10-1967
ஆண்டவன் அடியில்:- 25 - 7 - 1986

நாமும், நமது சமூகமும் உயர்வடையவும் நிழல்பெறவும் எம்மிடையே வாழ்கின்றாய் என்றிருந்தோம். நமக்கு அகாலமரணங்கள் புதுமையல்ல என்றாலும் உன் அவல மரணம் எம்மைத்தினமும் உலுப்பிக்கொள்கின்றதே உன் ஆன்மாவும் உன்நினைவால் வாடிய நம் உள்ளங்களும் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். எமது குலவிளக்கு அணைந்தபோது அறிந்துவந்து நமதுதுன்பங்களில் பங்கு கொண்டும் அஞ்சலி செலுத்தியும் கலந்து கொண்ட அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (24-05-1986) நிகழும் ஆத்ம சாந்திக்கிரியைகளில் பங்குபற்றும்படி உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

தாய் தந்தை, சகோதரர்கள்
கட்டப்பராய்,
கல்வியங்காடு.
[C-4223]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## முக்கிய அறிவித்தல்
### மகாதேவா ஜோதிடம்

நான் எழுதியதாக சில கையெழுத்துப் பிரதிகள் உலாவுகின்றன. இதில் சில திகதிகளைக் குறிப்பிட்டு அத்திகதிகளில் சில முக்கிய சம்பவங்கள் நடைபெறுமென கிரகநிலைகளை ஆதாரங்காட்டி எழுதப்பட்டுள்ளது. இவைகள் என்னால் எழுதப்படவில்லை இவற்றில் கூறப்படும் விடயங்களுக்கு நான் பொறுப்பாளியுமல்ல. நான் எனது வெளியீடான மகாதேவா ஜோதிடப் பத்திரிகையிலும், தினசரிப் பத்திரிகைகளிலும் வெளியிடாத எவ்விஷயத்தையும் எனது ஆதரவாளர்களாகிய மக்கள் நம்பவேண்டாம் எனக்கேட்டுக் கொள்கின்றேன்.

140, செல்லரி வீதி, கல்வியங்காடு, நல்லூர், யாழ்ப்பாணம்.
இ. மகாதேவா, (C-4151)

# 'டெய்ரானிக்' மூழ்கியதற்கு சாபம் தான் காரணமா?

## எகிப்திய 'மம்மி' களை தொடர்புபடுத்திஓர் ஐதிகம்

இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் உலகை அதிர்ச்சி கொள்ளவைத்த 'டெய்ரானிக்' உல்லாசப் பிரயாணிகளின் கப்பல் விபத்துப் பற்றிய சர்ச்சை இப்போது அக்கப்பலின் சிதைவு ஆழ்கடலில் கண்டுபிடிக்கப்பட்டபின் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

நூற்றுண்டின் ஆரம்பத்தில் கிடைத்த விஞ்ஞான தொழில் நுட்ப அறிவைப் பயன்டடுத்திக் கட்டப்பட்ட இந்த, 'எதனுலும் மூழ்கடிக்கப்பட முடியாத கப்பல்' 1912ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் திகதி தனது கன்னிப் பயணத்தை பிரிட்டனிலிருந்து அமெரிக்கா நோக்கி சுமார் 2,200 பிரயாணிகளுடன் ஆரம்பித்தது.

அன்றிரவு 11-40 மணியளவில் 46 728 தொன் எடையுள்ள இந்தப் பிரமாண்டமான கப்பல், தனது இயலுமான முழு வேகத்துடன் பயணம் செய்துகொண்டிருக்கையில், திடீரெனக் கப்பலின் முன்புறத்தில் நின்றிருந்த ஊழியரொருவர், கப்பலுக்கு அண்மையில் பாரிய பனிப் பாறையொன்று இருப்பதைக் கப்பலின் அறையிலிருந்த தலைவருக்கு அறிவித்தார்.

உடனடியாகக் கப்பல் இடப் புறமாகத் திருப்பப்பட்டது.

ஆனுலும்—

இந்தக் கடைசிநேர மாற்றம் பனிப் பாறையின் மேற்புறத்திலிருந்தே கப்பலைக் காப்பாற்றியது. நீருக்குக் கீழிருந்த பாறையின் அடிப்பாகம் கப்பலின் அடிப்பாகத்தில் பெரியதொரு துளையை ஏற்படுத்தியது.

★

கப்பலின் அடியில் துளை ஏற்பட்ட பின்னர்கூட கப்பலைக் கைவிட்டு உயிர் தப்புவதுபற்றிப் பிரயாணிகள் சிந்திக்கவில்லை. ஏனெனில் 'டெய்ரானிக்' எதனுலும் மூழ்கடிக்கப்படமுடியாதது என்பது அனைவரினதும் எண்ணம்.

நள்ளிரவு கடந்த பின்னரே பிரயாணிகளை கப்பலைக் கைவிட்டு உயிர்காப்புப் படகுகளில் உயிர் தப்புமாறு உத்தரவிடப்பட்டது. அத்துடன் கப்பல் ஆபத்தில் நிற்பதைக் காட்டும் ருெக்கட்டுகள் வானை நோக்கி ஏவப்பட்டதுடன் அருகிலுள்ள கப்பல்களுக்கும் அபாயச் செய்தி அனுப்பப்பட்டது!

சுமார் 2 200 பிரயாணிகளைத் தம்மீது சுமந்த இக்கப்பலில், 1250 பிரயாணிகளைக் கொண்டு செல்லக்கூடிய வகையில் 16 உயிர்காப்புப் படகுகளே இருந்தன அந்தப் 16 படகுகளிலும் பெரும்பாலானவையை, கப்பலைக்கைவிடும் உத்தரவு மிகவும் தாமதித்தே வழங்கப்பட்டதால் கப்பலிலிருந்து உடனடியாக இறக்கப்படமுடியவில்லை.

★

விபத்து நடந்த இரவு 7 மணியளவில் வேருெரு கப்பலிலிருந்து 'டெய்ரானிக்'கிற்கு முன்னுலுள்ள பனிப் பாறைபற்றிய அபாய அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆயினும் கப்பலின் வேகம் அவ்விரவில் குறைக்கப்படவில்லை?.

★

இரவு 9-30 அளவில் இன்னுெரு கப்பலும் 'டெய்ரானிக்'கிற்கு பனிப்பாறை பற்றிய செய்தியைஅனுப்பியது 'டெய்ரானிக்கின் ரேடியோ அறை தொடர்ந்து இயங்கினுலும்கூட மேற் கூறிய செய்தி ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான பதில் அனுப்பப்படவில்லை.

★

விபத்து நடந்த இடத்திலிருந்து சுமார் 8 மைல்களுக்கப்பால், பனிப்பாறை பற்றிய அபாயத்தினுல் 'கலிபோர்னியா' எனும் கப்பல் நிறுத்தப்பட்டிருந்தது. அக்கப்பலிலிருந்து அதன் ரேடியோ ஆபரேட்டர் அன்று மாலைமுதல் பனிப் பாறை பற்றிய அறிவிப்பை 'டெய்ரானிக்'கிற்குக்கொடுக்க முயன்ருர். ஆயினும் அவர் தமது பணியில் வெற்றிபெற்ருரா என்பது தெரியவில்லை. 'டெய்ரானிக்' விபத்திற்குள்ளாவதற்குப் பத்து நிமிடங்களுக்கு முன்னர் அவர் நித்திரைக்குச் சென்ருர்.

செந்தில்

இதேவேளை 'கலிபோர்னியா' வின் தளத்திலிருந்த அதன் அதிகாரிகள் 'மோர்ஸ் - ஒளி சமிக்ஞை' மூலம் 'டெய்ரானிக்'கிறகுச் செய்தி அனுப்ப முயன்றனர். ஆனுலும் 'டெய்ரானிக்'கிலிருந்து எவ்வித பதிலும் கிடைக்காததுடன், தம்மைத் தாண்டி பனிப்பாறை நோக்கி 'டெய்ரானிக்' சென்றதை அவர்கள் கண்டனர்.


'டெய்ரானிக்' பனிப் பாறையுடன் மோதிய பின்னர் அதிலிருந்து கிளம்பிய 'ஆபத்து உதவி' ருெக்கட்டுகளைக் 'கலிபோர்னியா' விலிருந்தோர் கண்டாலும் 'டெய்ரானிக்' பயணிகளுக்கு இன்பமூட்ட ஏவப்பட்டவையே அவைஎனக் 'கலிபோர்னியா' விலுள்ளோர் நினைத்தனர்!

இப்போது ஒரு கருத்துக் கூறப்பட்டுள்ளது.

இந்த 'அசாதாரண சக்தி' டெய்ரானிகிலிருந்த அலங்கார பொருளொன்றிலிருந்தே பிறப்பிக்கப்பட்டிருக்கலாமெனவும் கருதப்படுகிறது.

**"ஃபரோ மன்னர்களின் உறக்கத்தைக் குழப்புபவரை மரணம் ஆட்கொள்ளும்"**

எகிப்தை ஆண்ட ஃபரோ வம்ச மன்னர் ஒருவரின் சல்லறையில் பொறிக்கப்பட்ட சாபம்.



'டெய்ரானிக்' வட-அத்திலாந்திக்கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் காட்சி

சம்பவம் நடந்த இடத்திலிருந்து சுமார் 60 மைல் தெற்கே நின்றிருந்த 'சர்பாத்தியா' கப்பலின் ரேடியோ ஆப்பரேட்டர் நள்ளிரவு தாண்டி சிறிது நேரத்தில் தனது கன்னிப்பயணத்தை மேற்கொண்டிருந்த 'டெய்ரானிக்' குக்கு 'நல்வாழ்த்துச் செய்தி' ஒன்றை அனுப்புமுகமாக 'டெய்ரரானிக' கின் ரேடியோ அறையுடன் தொடர்பு கொண்டபோது அங்கிருந்து வரும் 'ஆபத்து உதவி' செய்தியைக் கேட்டார்

உடனே 'கர்பாத்தியா' தனதுதிசையைமாற்றிடெய்ரானிக்கை' நோக்கிச் சென்றது விடிவதற்கு சிறிது முன்னுல் 'கர்பாத்தியா' விபத்துநடந்த இடத்தை அடைந்தபோது கிடைத்த உயிர்காப்புப்படகுகளில் உயிர்தப்பிய 705 டெய்ரானிக்' பயணிகளையே காப்பாற்ற முடிந்தது. 1513 பேர் கடலுக்கு இரையாகினர்.

மேற்கூறிய சம்பவங்களை ஆராயும்போது 'டெய்ரானிக்' விபத்தைத் தவிர்த்திருக்கலாம் என்பது தெளிவு எத்தனையோ அபாய அறிவிப்புகள் கொடுக்கப்பட்டன அதேநேரம் 'டெய்ரானிக்' கிலிருந்து 'ஆபத்து உதவி' செய்திகளும் பின்னர் அனுப்பப்பட்டன. அத்துடன் அதன் தலைவர் காப்டன் ஸ்மித்தும் கடல் பிரயாணத்தில் அனுபவமிக்கவர்.

இவற்றையெல்லாம் மீறியும் இவ்விபத்து நடந்ததென்ருல், அது ஏதாவதொரு அசாதாரண மனிதசக்திக்கப்பாற்பட்ட சக்தியினுலேதான் என

19-ம நூற்றாண்டில் ஃபரோ மன்னர் ஒருவர் உறக்கத்திலிருக்கும் சவப்பெட்டியை [illegible] நினைத்த பாட்டிஷ் [illegible] ஒரு [illegible] பட்டி கிடைத்து சிறுது நாளில [illegible] அவரது கை முறிந்தது. அந்தப்பெட்டி பிரிட்டன் அனுப்பப்பட்ட கப்பல் [illegible] விபத்துக்குள்ளாகியது. பெட்டி வைக்கப்பட்டிருந்த [illegible] மர்மமாகத் தீப்பற்றியது. பாட்டிஷ்காரரின் [illegible]

★

கர்னுலான் பரபு என்பவர் இன்னுமொரு ஃபரோ மன்னரான துட்டன்கமும், அரசரான கல்லறையைத் தோண்டியெடுக்க எகிபது சென்ருர்.

கல்லறையை உடைத்து இரு மாதங்களின் பின்னர் கர்னுவான் பரபு எகிப்தில் தான் தங்கியிருந்த ஹோட்டலில் கண்விழித்தபோது சுகவீனமுற்றிருப்பதை அறிந்தார். சிறிது நேரத்தில் நினைவிழந்த அவர் அன்றிரவு மரணமானுர்.

கர்னுலான பிரபுவின் குழுவில் அங்கம்வகித்த ஆர்தர் மேஸ் என்ற புதைபொருளாராய்ச்சியாளர் அதேஹோட்டலில் சிறிது நாளின்பின இறந்தார்.

அந்த ஃபரோ மன்னரின் சடலத்தைப் எக்ஸ்-ரே படமெடுத்தவர் பிரிட்டனில் மர்மமான சுகவீனத்தால் மரணமானுர். பிரபுவின் செயலாளரும் ஒருநாள் கட்டிலில் இறந்து கடந்தார். கல்லறையினுள் புகுந்தவர்களுள் ஒருவ

(9-ம் பக்கம் பாக்க)

# ● அணுப்பரிசோதனை தடையை நிராகரிக்கும் அமெரிக்கா!
# ● பிலிப்பைன்ஸ் நிலையில் பாகிஸ்தான்!
# ● வருடந் தவருத இந்திய வெள்ள அனர்த்தம்!

அணு ஆயுதப் பெருக்கம் இன்றைய காலகட்டத்தில் தோற்றுவிக்கும் பாரதூரமான விளைவுகளை சோவியத் யூனியன் ஓரளவு அனுபவரீதியாகவும் உணர்ந்தேயுள்ளது. கடந்த ஆண்டு, ஹிரோஷிமாவில் முதலாவது அணுகுண்டு வீச்சின் 40வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு அணுப் பரிசோதனைத் தடையை சோவியத்யூனியன் தற்காலகமாகக் கொண்டுவந்தது. தொடர்ந்து இரு தடவைகள் இத்தடையை அது நீடித்துள்ளது

இவ்வார ஆரம்பத்தில்கூட சோவியத் இத் தடையை அடுத்த புதுவருடம்வரை நீடிக்கப்போவதாக சோவியத் தலைவர் மிக்கேல் கோபச்சேவ் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பின் மூலம் அணு ஆயுத பரிகரணத்தில் சோவியத் கொண்டுள்ள விருப்பம் தெளிவாகியுள்ளது

ஒவ்வொரு தடவையும் சோவியத் தனது பரிசோதனைத் தடையை அறிவிக்கும் போது அமெரிக்காவையும் தன்னுடன் சேர்ந்துகொள்ளுமாறு கேட்டுவந்துள்ளது. இத்தடவையும் திரு கோபச்சேவ் அமெரிக்காவை தம்முடன் சேர்ந்துகொள்ளுமாறு விண்ணப்பித்தார். ஆனுல் அமெரிக்கா இதனைக் காதில் போட்டுக்கொண்டதாக இல்லை.

"சோவியத் அணு ஆயுதபலத்தில் பெரும் வருத்தியடைந்துள்ளது. எனவே ஏனைய நாடுகள் அதன் பலத்துக்கு சமமாகவருவதை அதுவிரும்பாததலேயே அணுசக்திபரிசோதனைத் தடைகளை மேற்கொள்ளும்படி அடிக்கடி அது கேட்டுவருகின்றது" என்று அமெரிக்கா கூறியுள்ளது.

## உலக அரங்கு

சேர்நோபில் அணு ஆலை விபத்தில அணுசக்தி கதிரியக்கத்தினுல் பலர் பாதிக்கப்பட்டதை சோவியத் அனுபவரீதியாக உணர்ந்தது ஆனுல் 40 வருடங்களுக்கு முன்னர் ஹிரோஷிமா, நாகசாகியில் அணுகுண்டுகளைப் போட்டவேளை பல உயிர்கள் சாம்பரானதை நேரில் கண்டபோதும்கூட அக்குண்டின்தாக்கத்தை உணர்ந்ததாக அமெரிக்கா காணப்படவில்லை அது மேலும் இக்குண்டின் மூலம் தனது அசுரபலத்தைப் பெருக்கிக் கொள்வதிலேயே ஆர்வம் காட்டுகின்றது.

கடந்த தைமாதம் அமெரிக்காவின் விண்வெளி நடவடிக்கைகளுக்குப் பலத்த தாக்கம் ஏற்பட்டது. 'சலஞ்சர்' விண்வெளி விமானம 7 விண்வெளிச் சிப்பந்திகளுடன் வானில் வெடித்துச் சிதறியது. இதனைக் தொடர்ந்து அமெரிக்கா அனுப்பிய வேறு இரு ராக்செட்டுகளும் விபத்தில் சிக்கிக்கொண்டன.

இத் தாக்கங்களையடுத்து அமெரிக்காவின் 'நாஸா' விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தினர் வானத்தை 'அண்ணுந்து' பார்க்கக்கூடக் கூசுகின்றனர்

விண்வெளித்துறையிலும் சோவியத்யூனியனுடன் ஏட்டிக்குப் போட்டியாக அமெரிக்கா முண்டியடித்துக் கொண்டு சென்றது. விண்வெளியையே தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவது போல மார்தட்டிக்கொண்டிருந்தது.

—அனந்த்—

ஆனுல் 'சலஞ்சரின்' விபத்து அமெரிக்காவின் நவீன விண்வெளி ஆராய்ச்சிகளை மிகவும் பின்தள்ளியுள்ளது. அவ்விபத்தின் மர்மம் முற்றுமுழுதாக-கச்சிதமாகத் துலங்கிவிடவில்லை.

(4ம் பக்கம் பார்க்க)

## நல்லைவாழ் பீடுகுகன்

நாடுபுக ழாறுமுக நாவலனை நன்களித்த
நாடுபுக ழாறுமிகும் நல்லைவாழ்— பீடுகுகன்
தாள்மலரைச் சென்னியுறத் தாமணியும் பத்தர்களின்
குத்வாழ்வுயரச் செய்குவான் மன்

★ ★ ★

வண்டமிழ்க் தொண்டு செய்ய
வந்துதித்த நாவலன்வாழ்
வண்டமிழ்தேன் மன்பொழிலார் மாநல்லை— அண்டும்
முருகன் அருள்பொழிவான்; முத்திவழி காட்டுவான்
உருகிப் பணிகுவோர்க் கு

★ ★ ★

பாடுமடி யார்க்கருள்வான் பாவவினை நின்றறுப்பான்
ஆடுமயில் மீதிவரும் அண்ணலவன் — நாடு புகழ
நல்லை வதிமுருகன் நம்பர்பணி யுங்குமரன்
தொல்லை தவிர்ப்பான் தொழு.

--- கவியரசு வெண்பாமணி முருககூரியன்

[இன்று நல்லூர்க்கந்தன் 15-ம் திருவிழா]

# ஆதாரக் குறிப்புகளுடனும் விசேட மூர்த்திகளுடனும் விளங்கும் கோவில்

1780ம் ஆண்டுக்குமுன் ஸ்தாபிதமாகி 1951ம் ஆண்டு முதல் தர்மர்கத்தா சபையினுல் பரிபாலிக்கப்பட்டு வரும் பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவிலிலேயே மிக அருமையான உற்சவமூர்த்தியாகிய சித்தி புத்திசமேத விநாயகர் காட்சி கொடுத்தருளுகிறுர் எதிர்வரும் 30ந் திகதி சனிக்கிழமை இவ்வாலயத்தில் நடைபெற்று வந்த மண்டலாபிஷேகம் பூர்த்தி பெறுகிறது.

ஈமுத்திருநாட்டின் வதனமென விளங்கும் யாழ்ப்பாண நகரின் நுதலென விளங்குவது வண்ணுர்பண்ணை. அந்நுதலின் திலகமாக மிளிர்வது வைத்தீஸ்வரன் கோவில். இப்பெருங்கோயிலைச்சூழ அமைந்துள்ள அருள்மிகு ஆலயங்களுள் ஒன்ருகமிளிர்வது ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோவில். ஏறக்குறைய 35 வருடங்களுக்குப்பின் கெர்ப்பகிருகம், அர்த்தமண்டபம் ஆகியன புனருத்தாரணஞ் செய்யப்பெற்று 13-7-86ல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 45 நாட்களாக நடைபெற்றுவரும் மண்டலாபிஷேகப்பூர்த்திவிழா 30-8-86ல் நடைபெறத் திருவருள்பாலித்துள்ளது.

## ஆலயத் தோற்றம்

காசிவாசிபிரம்மஸ்ரீ அகிலேச கணேசஐயர் அவர்கள் சுமார் கி பி 1780ம் ஆண்டுகளுக்கு முன்பே யாழ்ப்பாணத்தல் குடியேறி பன்றிக்கோட்டு ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி பிள்ளையார்கோவிலையும்-துவாதசிமட புண்ணியத்தையும் ஸ்தாபித்தார்கள் என்பது 1822ம் இலக்கத் தோம்பின் பிரகாரம் அறியக் கிடக்கின்றது. அகிலேசகணேசஐயருக்குப்பின் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயர், காசிவிசுவநாதர்-சண்முகஐயர். அவர் புத்திரன பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணியஐயர் அவர்களினுலும் பரிபாலனம் செய்யப்பெற்று வந்தது. பாலசுப்பிரமணிய ஐயர் பிரமசாரியாக இருந்தமையினுலும் சந்ததியில்லாமையினுலும் 1951ல் தனது தர்மசாதனத்தை றஸ்ரி மூலம் கையளித்தார்.

## பரிபாலனசபை தோற்றம்

அன்று முதல் "வண்ணுர் பண்ணை பன்றிக்கோட்டு ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோவில் தர்மகர்த்தா சபை" என்றபெயருடன் இவ்வாலய நிர்வாகமும்-துவாதசிமடத் தருமமும் நடைபெற்று வந்ததென இல. 6385 கொண்ட சாசனமூலம் அறிகின்ருேம்.

இக்கோவிலைப் பரிபாலித்து வந்த பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணியஐயர் அவர்களுடன் கந்தப்பச்செட்டியார் வைத்தியநாதச்செட்டியாரும் தமது சில காணிகளை இக்கோவிலுக்குத் தர்மசாசனம் செய்துள்ளளார். என்பதை இல.6385

பண்டிதர்
வ கந்தசாமி

சாதனத்திலிருந்து அறியமுடிகின்றது. பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணியஐயர்-கந்தப்பச்செட்டியார் ஆறுமுகச்செட்டியார் சந்தப்பசேகரம் அவர்களும் சேர்ந்து தர்மர்கத்தா சபையை நிறுவியுள்ளார்கள்.

## இவ்வாலய தருமங்கள்

பெருநோக்கோடு செய்யப்பெற்ற தர்மங்களைப் பேணிப் பாதுகாத்து முன்னேர் கூறியபடி செய்யவேண்டியது எமது கடமையாகும்.

துவாதசிமடப்புண்ணிய தருமத்திலிருந்து வரும் வருமானத்தின் மூலம் இவ்வாலயத்தையும் நிர்வகிக்கலாமெனவும் சிறப்பாகச் சாசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

1888ம் ஆண்டு 4867 இலக்கச் சாதனம் குறிப்பிட்டுள்ள தர்மங்கள்:

[1] ஒவ்வொரு மாதமும் பூர்வபட்சத்துவாதசித்திதியில் பிராமணபோசனம் வழங்கப்படவேண்டும்.

[2] ஒவ்வொருமாதமும்பூர்வபட்ச ர்த்தியிலும் சதயநட்சத்திரத்தில் விநாயகப் பெருமானுக்கு விசேஷ பூசை நடாத்தப்பட வேண்டும்.

ஆகவேமேற்காட்டிய பணிகளைச் செய்வதோடு இன்றைய சூழ்நிலையில் சைவசமய வளர்ச்சிக்கும் எம்மால் இயன்ற பணிகளைச் செய்ய வேண்டும் என்பதே எமது பெருவிருப்பமாகும்.

[11-ம் பக்கம் பார்க்க]

## அணுப்பரிசோதனை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விண்வெளி விமானங்கள் (Space shuttles) அடிக்கடி பயணம் சென்றவேளை அதிபர் றீகன் விண்வெளியில் நட்சத்திரப்போர்பற்றி அதிகம்அலட்டிக்கொண்டார். ஆனல் சலெஞ்சர் விபத்து அவருக்குப் பல நட்சத்திரங்களைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தியிருக்கும்என்பதில் ஐயமில்லை.

எனவே விண்வெளி ஆராய்ச்சிகளில் முண்டியடித்து இன்று முடங்கிக்கொண்டிருப்பது போல, அணுசக்தி ஆராய்ச்சியிலும் மிதமிஞ்சிய போக்கினுல் ஆபத்தை தேடும் அறிகுறிகள் அமெரிக்காவிடம் காணப்படுகின்றன. அத்தகைய ஆபத்துக்கள் ஏற்படும் வரை கோபச்சேவின் விண்ணப்பம் மட்டுமல்ல, அனைத்து உலகின் வேண்டுகோள் கூட செவிடன் காதில் ஊதியசங்காகவே அமெரிக்காவிற்குஇருக்கும்.

★

## பாகிஸ்தான் நிலைமை

பாகிஸ்தானில் இடம்பெற்று வரும் அரசியல் கலவரங்கள் ஜனநாயகத்தை மீட்டெடுப்பதில் அந்நாட்டு மக்கள் கொண்டுள்ள அக்கறையையே எடுத்துக் காட்டுகின்றது முன்னுள் பாக் ஜனுதிபதி பூட்டோவின் மகளும், பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவியுமான செல்வி பெனுஸிர் பூட்டோ உட்பட சுமார் பத்து எதிர்கட்சித் தலைவர்கள் கைதாகியுள்ளனர்.

அதிபர் ஸியாவுல் ஹக் பாகிஸ்தானில் ஆட்சியமைத்தது முதல், தமது இராணுவ நிர்வாகத்தை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகளிலேயே தீவிரமடைந்து வந்துள்ளார். சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கைப்படி அங்கு பல அடிப்படை மனித உரிமை மீறல்கள் திரை மறைவில் இடம்பெறுவதும் தெரிய வந்துள்ளது.

பாகிஸ்தானின் முது பெரும் அரசியல் வாதியான கான் அப்துல் கபார்கான் கருத்து வெளியிடுகையில், "பாகிஸ்தான் மக்கள் ஜனநாயகத்தின் மீது விசுவாசம் கொண்டவர்கள். அவர்களைத் தொடர்ந்து துப்பாக்கி முனையில் அடக்கி ஆள முடியாது" என்று கூறியுள்ளார்.

இது தவிர அமெரிக்க அரசியல் பிரமுகரான திரு லோடர்ன் என்பவர் "பாகிஸ்தான் அரசியல் நிலைமை இன்னும் ஐந்து வருடங்களில் பிலிப்பைன்ஸில் நிகழ்ந்ததைப் போன்ற ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும்" என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

இவ்விரு அரசியலாளர்களின் கருத்துக்களையும், பாகிஸ்தானில் தொடரும் வன்முறைகளையும் நோக்கும்போது ஐந்து வருடமல்ல இன்னும் ஓரிரு மாதங்களில் கூட பிலிப்பைன்ஸில் நடந்தது, இங்கு நடக்கலாம்.

★

## இந்திய வெள்ள அநர்த்தம்

இந்தியாவில் வெள்ளப் பாதிப்பு வழமை போலவே இத்தடவையும் பலத்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உத்தரபிரதேஷ், ஆந்திரப் பிரதேஷ் ஆகிய மாநிலங்களிலேயே இப்பாதிப்பு அதிகளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்விரு மாநிலங்களில் சுமார் 300 பேர்வரை இறந்துள்ளனர். லட்சக்கணக்கானவர்கள் வீடு வாசல்களை இழந்துள்ளனர் ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர் விளை நிலம் நீரில் மூழ்கியுள்ளது

இந்தியாவைப் பொறுத்தவரை இப்பாதிப்புக்கள் புதிதானவையல்ல. வருடந்தவருமல் நிகழ்பவை. இந்திய குடித்தொகையைக் கட்டுப்படுத்துவதில் இந்த வெள்ள அழிவு பெரும்பங்கு வகிக்கின்றதெனலாம்.

ஆயினும் மனிதாபிமான ரீதியில் நோக்கும்போது இந்த அழிவைத் தொடரவிடுவது, இந்தியாவில் சமூகப் பிரச்னைகளை ஒரு தொடர் கதையாக இருக்க அனுமதிப்பது போலாகும என்றே கொள்ளவேண்டும் பெரும் நதி நீர் வளத்தையும், பரந்த ஆற்றுப் படுக்கைகளையும் கொண்டது இந்தியாவாகும்.

வெள்ளப் பெருக்கினுல் ஏற்படும் அழிவுகள் இந்த ஆற்ருேரப் பகுதிகளிலும், பள்ளத்தாக்கான பகுதிகளிலுமே கூடுதலாக இருக்கின்றது. எனவே தகுந்த வடிகால் அமைப்பு - அணைக்கட்டுத் திட்டங்களை இந்தியா திட்டமிட்டு உருவாக்க வேண்டும். அத்துடன் ஆற்ருேர வாழ்க்கையை நம்பியிருக்கும் கோடிக்கணக்கான இந்தியப் பாமர மக்களுக்கு பாதுகாப்பான குடியமர்வுத் திட்டங்களை இந்திய நிபுணர்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

'பெரி'ஸ்கோப் —

# உமது ராஜ்யம் வருவதாக!

'வருகின்றதென்று சொல்லி புலியே வந்ததடா' என்ற பாணியில் இனப்பிரச்னைக்கான 'தீர்வு நாடக'த்தின் இறுதிக் கட்டம் போராளிகளின் அரங்கினைத் தான் அண்மித்திருக்கிறது!

'இருல் போட்டுச் சுருப்பிடிக்கும்' தந்திரம் பலிதமாகாத ஒரு இக்கட்டான முச்சந்தியில், இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண போராளிகளுடன் பேசத் தயாரென மாட்சிமைதங்கிய ஜனுதிபதி ஏதோ ஒரு அசட்டுத் துணிச்சலில் கூறியுள்ள அதேவேளையில் தற்போது கொழும்பில் நடைபெறும் 'சமாதான' பேச்சுவார்த்தைகளில் தாம் தலையிடப்போவதில்லை என ஐந்து தமிழ் விடுதலை இயக்கங்களின் முதல்வர்கள் இந்திய அரசுக்கு உறுதியளித்துள்ளதாக விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

பிரச்னையில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் வெளியிடும் கூற்றுக்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக அபஸ்வரங்கள் தட்டுகின்றபொழுதிலும் ஏதோ ஒரு தீர்க்கமான முடிவுக்கான "திட்டம்" தீட்டப்படுவதை உணரமுடிகின்றது.

எனினும் —

கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கின கதையாக இது அமையுமோஎனச் சிலர் அங்கலாய்ப்பதையும் பார்க்க முடியாமலில்லை.

'வாட்பிளேஸை' வாசஸ்தலமாகக் கொண்டவர்களுக்கும் 'எம்பிறெஸ்'ஸை தற்காலிக ஜாகையாக மாற்றிக்கொண்டவர்களுக்கும் நம்மூர் நடப்புக்களை நேரடியாக நிதர்சனமாகக் காணக்கூடிய வாய்ப்பில்லைத்தான். ஆனல் இங்குள்ளவர்கள் பயத்துடன் வாழப் பழகிவிட்டார்கள் எனப் பெருமையுடன் கூறிக்கொண்டபொழுதிலும், 'மாமியாரின் கோபத்தை மருமகள் அம்மியில் காட்டுகின்ற' பாணியில் கேவலம் மணல் மூட்டைகளை மனதில் வைத்துக் கொண்டு அப்பாவி மக்கள் மீது 'ஷெல்' மழையைப் பொழியும் 'கேடி'யர்களைத் தட்டிக்கேட்க எவருமில்லை!

இந்த லட்சணத்தில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஒரு நிரந்தர தீர்வுக்கு வித்திடுமா என்பதில் சந்தேகம் நீடிக்கவே செய்கின்றது.

ஆனல் —

மலைநாட்டுக் குளிருக்கு நடுங்காத 'நாயகர்கள்' தென்கரையோரப் பகுதியிலிருந்து வீசப் புறப்பட்டுள்ள வெப்பக் காற்றல் வியர்த்து விறுவிறுக்காமல் நடுங்கிச் சாகின்றனர்.

வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்க்க வரிந்து கட்டிக்கொண்டு புறப்பட்டவர்கள் இன்று வடக்கும் தெற்கும் 'எழுச்சிரீதியில்' இணையுமோ என்ற பிரமையில் பீதிகொண்டு பிதற்றுகின்றனர்!

'சுண்டெலிக்குச் சீவன்போகுது, செல்லப்பிள்ளைக்கு விளையாட்டு' என்ற மாதிரி வெறும் பேச்சுப் பேசுவதற்கும், பிதற்றுவதற்கும் இது நேரமில்லை.

வெட்டொன்று துண்டு இரண்டாக விஷயத்தை ஒப்பேற்ருத பட்சத்தில் வீண் பலிகளும் கொலைகளுமே விளைவுகளாய் இருக்கும்.

'மழைக்கால் இருட்டிலும் குரங்கு கொப்பிழக்க' பாயாமல் இருந்தால் சரிதான்!

இந்நிலையில் ஆண்டவன்தான் எமக்குக் காவல்!

இங்கு, உமது ராஜ்யம் வருவதாக!

# இவ்வாரம் எப்படி?

## இன்று

மாதம்: ஆவணி
திகதி: 8 (1986-08-24)
கிழமை: ஞாயிறு
திதி: பஞ்சமி
பி.இ வரை
நக்ஷத்திரம்: ரேவதி
மு.ப.வரை

### மேடம்

தொழில புரியும் இடத்தில் ஒத்துழைப்புக் கிடைக்கும். இதயப் படுதாவில் இன்பத்தின் கூற்று. காதலர்கள் களிப்படைவர் எதையும் முன்னெச்சரிக்கையுடன் சாதிக்கவும். வாழ்விலும் வளமான திருப்பம் காணும். நன்னுள்.

### இடபம்

சகோதர வழியாலும் சஞ்சலத்திற்கும் இடமுண்டு. தொல்லைகளும் அதிகரிக்கலாம். அதிக சிந்தனை மூலம் சிறிய தலையிடிக்கும் இடமுண்டு. ஏமாற்றப்படுவீர்கள். எதிலும் அவதானம் வேண்டும்.

### மிதுனம்

அன்னையின் ஆசியுடன் நாளைக் கடத்துவீர்கள் நீர்த் தொழில் விருத்திக்குமிடமுண்டு. சமூகத்திலும் மதிப்புக்கிடமுண்டு. கல்வி உயர்வுக்குமிடமுண்டு வெளியிடத்துத் தொடர்பும் பெருகும்.

### கடகம்

புத்திரர் சுகமுண்டு. இல்லத்திலும் அமைதி நிலவும். வாழ்விலும் தித்திப்பான சம்பவங்கள் இடம்பெறும். இரு தொழில் புரியும் வாய்ப்புக் கிட்டும். மகிழ்ச்சிகரமான தினம்.

### சிங்கம்

துஷ்டர்களின் உறவால் துயரத்தில் மூழ்குவீர்கள், சிலர் வாழ்க்கையில் ஆசாரக் குறைவுக்கிடமுண்டு. காதலர்களுக்குக் கசப்பான தினம். தானிய நஷ்டத்துக்குமிடமுண்டு தொழில்த் துறையிலும் ஏமாற்றத்திற்கு இடமுண்டு.

### கன்னி

களஸ்திர வழியும் ஏற்படும். கவர்ச்சிகரமான பொருள்களை மனம் நாடும். காதலர் வாழ்விலும் புத்துயிர்பிறக்கும். சண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள். வருமானத்திலும் திருப்தி காணும்.

### துலாம்

எவ்விடயத்திலும் விழிப்புணர்ச்சியுடன் இருக்கவும். பண விரயத்திற்குமிட

[10ம் பக்கம் பார்க்க]

# தேவாரத் திருப்பதிகங்களில் இடைச் செருகல்

மட்டுவில் ஆ. நடராசா

**கருத்தோடு படிப்பவர்களுக்கு அருள் நூல்களிலும் கற்பனையான சந்தேகங்கள் ஏற்படுவது நியாயமே. இத்தகைய சந்தேகங்களைச் சந்தேகங்களாகவே கருதினால் விபரீதமான வியாக்கியானங்களுக்கு இடமேற்படாது. இத்தகைய சந்தேகங்கள் விசாலமான அறிவாலும் நூலறிவோடு கூடிய மதிநுட்பத்தாலும் நீங்க முடியும்.**

ஆலயத்திலே விழா நடக்கிறது. அன்றைய செய்தித்தாளிலே அவ்வாலய மூர்த்தியைப் பாடிய செய்யுள்கள் வெளிவருகின்றன. அச்செய்யுளைச் செய்தவர் அன்று ஆலயத்துக்குச் சென்று தன் கவிதையைப்பாடி அங்குள்ள மூர்த்தியை வழிபடுகின்றாரா? இதுபற்றி ஒரு ஆய்வு செய்தால் விடை கிடைக்கலாம்.

## அருளாளர் பாக்கள்

தேவார முதலிகள் இறைவனுக்குப் பாமாலை சூட்டினார்கள். சம்பந்தக் குழந்தை 'தோடுடைய செவியன்' என அடியெடுத்து இறைவனைப் பாடியது. அக்குழந்தை கவி பாடுவதற்குமுன் கவிதை புனையக் கற்றதாக வரலாறுஇல்லை, திருவருளால், இறைவனைச் சுட்டிக்காட்ட வேண்டிய தேவை சம்பந்தனுக்கு ஏற்படுகிறது; கவிதை வருகிறது.

'பித்தா' என ஏசிய வாயால் பித்தா என இறைவனை அழைத்து அவனைப் பாடுஞ் சூழ்நிலை சுந்தரருக்கு உருவாகியது. திருவருள் இருந்தவாறு அது.

''...திரு முல்லை வாயிலாய்
திருப்புகழ் விருப்பால்
பன்னலந் தமிழாற் பாடுவேற்
கருளாய் பாசுப தாபரஞ்
சுடரே'' என்பது சுந்தரரின் திருப்பாட்டு.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் இறைவனைப் பாடியதற்கான காரணத்தைத் தாமே கூறியிருக்கின்றார். இறைவனது புகழைப் பாடவேண்டும், அவனுடைய நல்லியல்புகளைப் புகழவேண்டும் என்பது சுந்தரரின் ஆசை.

''தொண்டர் கூடித்
தொழுதழு தாடிப் பாடும்
அன்பலாற் பொருளு மில்லை
ஐயன்ஐ யாற னார்க்கே''

என்பது அப்பர் கூற்று.

''தாண்டக வேந்தராகிய அப்பர் ''எனக்குச் செந்தமிழ் தெரியாது; கவிபாடவராது; இறைவனே இசையும் இசையோடு கூடிய கலைகளுமாவான்; அவனை, அவனுடைய தன்மைகளை நான் அறியமாட்டேன். அறிவிலியாகிய எனக்குத் தன்கல்யாண குணங்களை அறிவித்துத் தன்னை அடைய வழியுங் காட்டியவன் அவன்'' என்கிறார்.

''பன்னியசெந் தமிழறியேன்
கவியேன் மாட்டேன்
என்னோடு பன்நிறைந்த
கலைகளாய்
தன்னையுந்தன் திறத்தறியாப்
பொறியிலேனைத் தன்திறமும்
அறிவித்துநெறியுங்காட்டி...'

என்பது திருத்தாண்டகம்.

தமிழறியேன் என்பவன் தன் தமிழ்ப் பாடல்களை அரங்கேற்ற எண்ணமாட்டான். அப்பர் தான்பாடிய தேவாரங்களை அரங்கேற்ற நினைக்கவில்லை. தேவார முதலிகள் எவருந் தமது பாடல்களை அரங்கேற்றியதாக வரலாறு இல்லை. அவர்கள் இறைவனைப் பாடுவதற்காகவே பாடல்களைப் பாடினார்கள்.

''...கீதம் வந்த வாய்மையால்
கிளர் தருக்கி னார்க்கலால்
ஓதி வந்த வாய்மையால்
உணர்ந் துரைக்க லாகுமே''

என்கின்றார் சம்பந்தர் (ஓதி-ஞானம்).

'அடியார்க் கடியன்' என்று பாடிய சுந்தரர் தன்னைப் பொருள்செய்யவில்லை. தனக்கு முன் வாழ்ந்த அப்பரும் சம்பந்தனும் பாடிய பாடல்களையே அவர் மதிக்கிறார்.

'நல்லிசை ஞானசம் பந்தனும்
நாவினுக் கரசரும் பாடிய
நற்றமிழ்மாலை சொல்லிய
வேசொல்லிஏத்துகப் பானை'

என்கிறார் சுந்தரர். அப்பரும் சம்பந்தரும் பாடிய தமிழ்ப் பாடல்களைக் கேட்பதில் இறைவனுக்கு அளவற்ற ஆசை என்கிறார் அவர்

திருக்காளத்திப் பதிகத்தில் ''பொய்யன் நாயடியேன் புகவேநெறி ஒன்றறியேன்'' என்றும், திருத்துருத்தியும் திருவேள்விக் குடியும் பதிகத்தில் ''குடியுளார் அடிகளைச் செடியனே நாயேன். பாடுமாறறிகிலேன். எம்பெருமானை ''என்றும் பாடுகின்றார். அத்தகைய எளியவனாகத் தன்னைக் கருதும் சுந்தரர், தன்னை ஒரு வழிகாட்டியாகக் காட்டக் கனவிலுங் கருதுவாரா?

சுந்தரர் பாடிய திருவொற்றியூர்ப் பதிகத்தின் பத்தாம் பாடல் வருமாறு:

''ஓதம் வந்துல வுங்கரை
தன்மேல் ஒற்றியூர் உறை
செல்வனை நாளும் ஞாலந்
தான்பர வப்படு கின்ற
நான்மறை அங்கம் ஓதிய
நாவன் சீலந் தான்பெரி
தும்மிக வல்ல சிறுவன்
வன்றொண்டன் ஊரன்
உரைத்த பாடல் பத்திவை
வல்லவர் தாம் போய்ப்
பரகதி திண்ணம் நண்ணுவர்
தாமே'' இப்பாடலை நோக்குமிடத்து இப்பாடல்;

## சிறப்புப் பாயிரம்

I சுந்தரர் பாடிய திருவொற்றியூர்ப் பதிகத்துக்கு ஒரு சிறப்புப் பாயிரமாக, வேறொருவர் பாடியதாகக் கருதக் கூடியதாக, பதிகத்தைப் படிப்பதாற் பெறும் பயன் என்ன என்பதைக் கூறுவதாக அமைகிறது.

II சுந்தரரின் பெருமையை எடுத்துக் கூறுகிறது.

III இப்பதிகத்தில் இப்பாடலைத் தவிர பத்துப் பாடல்கள் இருப்பதாக உணரமுடிகின்றது.

தொடர்ந்து சுந்தரரின் திருக்கச்சி ஏகம்பப் பதிகத்தின் பதினோராம் பாடலை நோக்குவோம் பாடல் வருமாறு:

''பெற்றம் ஏறுகந் தேற
வல்லானைப் பெரிய எம்பெரு
மான்என்றெப் போதும் கற்ற
வர்பர வப்படுவானைக் காலைக்
கண்அடியேன்-பெற்றதென்று
கொற்ற வன்கம்பன் கூத்தன்
எம் மானைக் குளிர்பொழில்
திரு நாவலூரன் நற்றமிழ்
இவைஈ ரைந்தும் வல்லார்
நன்னெறி உல செய்துவர்
தாமே''

இப்பாடலிலும் 'ஓதம் வந்துல வுங்கரை தன்மேல் ஒற்றியூர்' என்னும் பாடலில் அவதானித்த அதே கருத்துக்களை அவதானிக்க முடிகின்றது.

## எண்ணிக்கை பிழைக்கிறது

மேலே தரப்பட்ட இரண்டு பாடல்களிலும் அவதானிக்கக் கூடியவை ஒன்றாயிருக்கின்ற போதிலும் ஒரு பதிகத்தில் பத்துப் பாடல்களும் மற்றைய பதிகத்தில் பதினொரு பாடல்களும் இருக்கின்றன. பதிகத்தில் பத்துப் பாடல்கள் இருக்கின்ற போதும், பதிகத்தில் பதினொரு பாடல்கள் இருக்கின்ற போதும் 'பத்தும் வல்லார்' எனப் பொருள்படக் கூறுவது எப்படிப் பொருந்தும்? இங்கு காட்டப்பட்டது ஒரு உதாரணம் மாத்திரமே.

'பத்துக்கும் பதினொன்றுக்குமிடையில் ஒன்றுதாமன வித்தியாசம் இதை ஏன் பெரிதுபடுத்துவான்?' எண்கணித அடிப்படையில் நோக்கில் ஒன்று வித்தியாசப் பட்டாலே கணக்குக்குரிய விடை பிழை. மாங்காய் வியாபாரமாயிருந்தால் பத்துமாங்காய் விற்கும் போது ஒன்று கூடிக்குறைவதால் பெரிய நட்டம் ஏற்படாது. தேவாரங்கள் மாங்காய்கள் அல்ல. அவை விலை மதிப்பற்ற மாணிக்கங்கள். ஆகவே அவை ஒவ்வொன்றையும் அவற்றின் புனிதத்தன்மை கெடாது பாதுகாக்கவேண்டும்.

மெய்ஞ்ஞானியாகிய சுந்தரர் தனது பதிகங்களில் எண்ணிக்கையிற்கூட இப்படியான தவறிழைப் பாரா? தான் பாடிய பாடலைப் படிப்போர், என்ன பயன் பெறலாம் என்று கூறி அவற்றைப் படிக்கும்படி மற்றையோரைத் தூண்டுவாரா? இவ்வினாக்களுக்கு விடை கூறின். 'இல்லை' என்றே கூறவேண்டும். 'இல்லை என்ற விடையைக் கூறுதவர்களால் ஆரம்பத்திற் கூறப்பட்ட கவிஞர்களால் அரங்கேற்றப்படும் கவிதைகளுக்கும் ஞானிகள் பாடிய தேவாரத் திருப்பதிகங்களுக்கும் வேறுபாடு காண முடியாது.

தொடர்ந்து. சம்பந்தன் தேவாரத்துக்கு வருமுன் நாயன்மார்களைப் பற்றிச்சிறிது சிந்திப்பது நல்லது. அவர்கள் தன்முனைப்போடு எதையுஞ் செய்யாதவர்கள். திருவருளின் குறிப்பறிந்து நடப்பவர்கள். பெரிய அற்புதங்களைச் செய்த போதுகூடத் தமது செயலையிட்டு அகந்தை கொள்ளாதவர்கள் மிக இலகுவான காரியங்களைக்கூட அவர்கள் 'நான் செய்கிறேன்' என்னும் முனைப்போடு செய்யவில்லை.

சமண பௌத்தர்களைவாதில் வெல்வது சம்பந்தனுக்கு மிக இலகுவான 'காரியம்'. சம்பந்தன் மெய்ஞ்ஞானி. அவன் தன் முனைப்போடு வாதுக்குச் செல்லவில்லை. அவன்

''வேத வேள்வியை நிந்தனை
செய்துழல்
ஆதமில்லி அமணொடு
தேரரை
வாதில் வென்றழிக்கத்திரு
வுளமே'' என

இறைவனை இறைஞ்சி, திருவருட் குறிப்பின்வழியில் வாது செய்தவன். (ஆதமில்லி—அறிவற்ற)

'யான் செய்தேன் பிறர்
செய்தா ரென்னதியானென்னு
மிக் கோணை ஞானவெரி யால்
வெதுப்பி நிமிர்த்துத் தான்
செவ்வே நின்றவன்' சம்பந்தன்.

பாண்டியனுடைய வெப்பு நோயை நீக்குவதற்குச் சம்பந்தன் பாடிய பதிகம் திருநீற்றுப் பதிகம் அப்பதிகத்தின் பதினோராம் பாடல் வருமாறு:

'ஆற்றல் அடல் விடையேறும்
ஆலவர் யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலவும்
பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற
தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும்
வல்லவர் நல்லவர் தாமே'

''உண்ணினும் பசிப்பினும்
உறங்கினும் நின்
ஒண்மல ரடியலால் உரையா
தென்நா...''

என்று கூறுஞ் சம்பந்தன் பாடலில், மூன்றாந் திருமுறையில், திருவாலவாய்ப் பதிகத்தின் பதினோராம் பாடலின் நான்காம் அடி வருமாறு:

''நானுரைத்தன செந்தமிழ்
பத்துமே வல்ல வாக்கிவை நற்
றமிழ் பத்துமே'' இதுவுஞ் சம்பந்தன் தமிழ்!

சுந்தரர் தேவாரத்தில் பத்துப் பாட்டுக்கள் இருக்கும் பதிகங்களில், பத்தாம் பாடல்களில், பத்தும் வல்லார்என்ன பயன் பெறுவர் எனக்கூறப் பட்டிருப்பினும் சம்பந்தன் தேவாரத்தில் பத்தாம் பாடல்களில் அத்தகைய கூற்றைக் காணவில்லை. அத்தகைய கூற்றுப் பெரும்பாலும் பதினோராம் பாடல்களிலேயே காணப்படுகிறது.

## ஊகங்களுக்கு உள்ள வாய்ப்பு

இதுவரை காட்டப்பட்ட உதாரணங்கள், சம்பந்தன் தேவாரத்திலும், சுந்தரர் தேவாரத்திலும் இடைச்செருகல்களும் மாற்றங்களுஞ் செய்யப்பட்டிருக்கலாம் என்பதை ஊகிக்க உதவலாம். ஊகங்கள் உண்மைகள் அல்ல. அவை சரியாகவும் இருக்கலாம், பிழையாகவும் இருக்கலாம்.

புனல்வாதஞ் செய்தபோது சம்பந்தனால் பாடப்பட்ட தேவாரத் திருப்பதிகம், திருப்பாசுரப் பதிகம். இப்பதிகம் மூன்றாந் திருமுறையில் இடம் பெறுகிறது. இப்பதிகத்திலுள்ள பாடல்கள், தாம் எழுதப்பட்ட ஏட்டுக்கு ஆற்றில் எதிரேறும் அற்புத ஆற்றலைக் கொடுத்தவை. அப்பாடல்களாற் காலவெள்ளத்திலும் எதிரேறிச் செல்ல முடியும் போலும். அவை பல ஆண்டுகளுக்கு முன் தம்மிடையே தம்மைப்போன்ற இன்னொரு பாடலைச் செய்து யாரோ இனந்தெரியாத ஒருவர் புகுத்தியிருப்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

''நல்லார்கள் சேர் புகலி
ஞான சம்பந்தன் நல்ல
எல்லார் களும்பரவும் ஈசனை
யேத்து பாடல்
பல்லார் களும்மதிக்கப்
பாசுரம் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலக
காளவும் வல்ல ரன்றே''

இப்பாடலிலும் மேலேகாட்டிய சுந்தரர் தேவாரங்களில் அவதானிக்கக் கூடியனவாயிருந்த பண்புகளை அவதானிக்க முடிகிறது. தாய் பிள்ளையைப் பார்த்து ''நீங்கள் படித்துக் கெட்டிக்காரப் பிள்ளையாய் வந்தாற்றான் நல்ல பிள்ளை'' என்று கூறுவதுபோல, பாடல் பத்தும் வல்லவர் தாமே நல்லவர் எனப் பாடல் கூறுகிறது. பாடத்தைப் படிக்கும்படி தாய் பிள்ளையைத் தூண்டுவதில் தவறில்லை. ''எனது பாடல்களைப் படித்து, அதில் வல்லவர் ஆகுங்கள் நான் உங்களை நல்லவர் என அழைக்கிறேன்''என்று கவிதை நூலைப் பிரசுரித்த கவிஞன் சொல்வதில் தவறில்லை. அவன் தான் அச்சிடுவித்த புத்தகங்களை விற்கத்தானே வேண்டும்!

ஆனால் தன்னைப் படர்க்கையில் வைத்து, தான் பாடிய பாடல்களைப் படித்து வல்லவராயும் நல்லவராயும் ஆகும்படி சம்பந்தன் ஏன் எவரையாவது கேட்கவேண்டும்? நல்லிசை ஞானசம்பந்தனும் நாவுக்கரசரும் பாடிய பாடல்களைப்பாடுங்கள், அதை இறைவன் விரும்புவான் எனச் சுந்தரர் கூறியது போலக் கூறும் சான்றாண்மை சம்பந்தனிடமில்லையா? ஏன் சம்பந்தன் இப்படிக் கூறவேண்டும்!

இப்பாடல் திருப்பாசுரப் பதிகத்தின் இறுதிப்பாடல்: பன்னிரண்டாவது பாடல் இப்பாடலின்படி இப்பாடலைவிடப் பதிகத்தில் பத்துப்பாடல்கள் தான் இருக்கவேண்டும். ஆனால் பதிகத்தில் இப்பாடலைவிடப் பதினொரு பாடல்கள் இருக்கின்றன எனவே இப்பாடல்களில் ஒன்று இடைச்செருகல் என்பது உறுதி. சம்பந்தன் தான் திருபபாசுரப் பதிகத்திற் பாடிய பாடல்களின் எண்ணிக்கையைத் தவறாக எண்ணிவிட்டார் என எண்ணுவது தவறு.

## வெள்ளிப் பாட்டு ஆதாரம்

சம்பந்தன் தேவாரத்தின் தொடர்பில் மேலுமொரு சம்பவம். திருப்பனந்தாள்ஸ்ரீகாசி மடத்தார் பதிப்பித்த பல நூல்களில் ஒன்று சம்பந்தன் தேவாரம். அந்நூலின் இறுதியில் பிற்சேர்வு இடம்பெற்றிருக்கிறது. பிற்சேர்வில் ஒரு பதிகம் வெள்ளிப் பாட்டு. அப்பதிகம் பாடப்பட்ட தலம் திருமறைக்காடு. பதிகத்துக்குரிய பண்-கொல்லி.

இப்பதிகத்துக்கு அடிக்குறிப்பு எழுதப்பட்டிருக்கிறது. அக்குறிப்பு வருமாறு:_

(8 ம் பக்கம் பார்க்க)

## வீரமணி, வாழியவே

வளம் நிறைந்த கலைஞர்பலர் வாழ்கின்ற இணுவையிலே
தளம் கொண்ட கணபதியான் திருக்கோவில் வீதியிலே,
நிலை கொண்டு வாழ்ந்துவரும் வீரமணி ஐயாவே
கலை வளர நின் பணிகள் மென்மேலும் தொடருகவே

முந்தை வினைப் பயனோ, முன்னோர் செய்தவப்பயனோ
எந்தாய் இவ்வுலகிற்கு நின்வருகை அறிகிலன் யான்
செந்தமிழ் அன்னையவள் செய்ததவப், பயனென்றே
சிந்தை மகிழ்ந்து நான் செப்புகின்றேன் இது உண்மை

கருவிலே கொண்டு வந்த கலைகள் நின்பொக்கிஷமாய்
மெருகுடனே பெருகி வர வேண்டுகிறேன் கூத்தனிடம்
ஆடலுடன் பாடலையும் இணையாக வரித்துள்ள
சீடனன்றோ நீர் அந்தத் தில்லை நடராஜனுக்கு

பைந்தமிழில் பாமாலை தொடுத்துனைச் சூழ் நல்லவரை
சந்ததமும் மகிழ்விக்கும் கலையரசே நினது புகழ்
என்றென்றும் எண்திசையும் பரவி நிலைத்திடவே
இன்றுன்னை வாழ்த்துகிறேன் வீரமணி வாழியவே

கலைகளோடின்னும் நற் செல்வங்கள் பல பெற்று
மலையனவாய் உயர்ந்து நின் தேவியுடன் மகிழ்வுடனே
அலை அலையாய் வரும் துன்பம் அகன்றுநீர் வாழியென
கலைமகளைத் துணைக்கொண்டு உளம்கனிந்து வாழ்த்துகிறேன்.

—திருமதி சு. செல்வத்துரை,
(உப அதிபர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்)

● பிரம்மஸ்ரீ க. வீரமணிஐயர் அவர்கள் சாகித்திய சாகரம் பட்டம்பெற்றதை முன்னிட்டுப் பாடப்பெற்ற வாழ்த்து.

# கிளிநொச்சியின் துயரம்!

3

செல்வம், சீர், சிறப்புமிக்க கிளிநொச்சி இன்று துயரம் படிந்த பகுதியாக பயப்பிராந்தியமாக மாறிவிட்டது இந்த நிலையிலும் அந்த மண்ணைவிட்டகலாமல் எது வந்தாலும் இந்த மண்ணை விட்டகலோம் என்ற திடசங்கற்பத்துடன் வாழுகின்ற பல்லாயிரக்கணக்கானவர்களை இன்றும் கிளிநொச்சியில் காணமுடிகிறது. இதேவேளை கிளிநொச்சி மக்கள் வெறுமனே விவசாயிகளாக மட்டும் வாழவில்லை. வீரம் செறிந்த மக்களாகவும் விளங்கி வருகிறார்கள். இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு அண்மையில் இடம்பெற்ற வரலாறு காணாத பேரணியாகும். இந்தப் பேரணியில் 1983-ம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டு கிளிநொச்சியில் தஞ்சமடைந்து பின்னர் கிளிநொச்சி மண்ணிற்கே தம்மை சொந்தமாக்கிய தும்புலுவில் குடியேற்ற வாசிகள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

மலையகத்தில் பிறந்து வளர்ந்த இந்த தும்புலுவில் வாசிகள் பலரை நான் சந்தித்தேன்.

### "வாழ்வளித்தவரை மறக்க முடியுமா?"

"அல்லலுற்ற நேரத்தில் எமக்கு வாழ்வளித்தவர்கள் துயரத்தில் மூழ்கியிருக்கும் போது நாம் சும்மா பார்த்துக் கொண்டிருக்கமுடியுமா? எனவே தான் ஏதாவது விதத்தில் எமது ஐக்கியத்தைக் காட்ட முனைந்தோம். அரசுக்கு எமது கண்டனத்தைத் தெரிவிக்க ஆசைப்பட்டோம். எனவேதான் இந்தப் பேரணியில் கலந்துகொள்ள ஐம்பது மைல் தொலைவில் உள்ள தும்புலுவிலில் இருந்து சைக்கிள் மூலம் வந்து சேர்ந்தோம்" என்று தெரிவித்தனர் இந்தத் தும்புலுவில் வாசிகள்.

1983 ஜூலைக் கலவரம் இந்த மக்களை விட்டகலவில்லை என்பதையும் அவர்களுடன் பேசிப் பார்த்ததில் அறியவும் முடிந்தது.

உருத்திரபுரம் 8-ம் வாய்க்கால் வாசியான நடராசா பாலசண்முகநாதனுடன் ஆரம்பகால கிளிநொச்சியைப் பற்றி அறிய ஆவல் கொண்டு தொடர்பு கொண்டேன்.

### 54—இல் கிளிநொச்சி

54-ஆம் ஆண்டு கிளிநொச்சியில் தான் குடியேறியதாகவும் அப்போது ஒரு காட்டுக் கிராமமாக இப்பகுதி இருந்ததாகவும் கூறும் திரு. பாலசண்முகநாதன் பயங்கர மிருகங்களின் அட்டகாசம் ஒரு புறம். கொடிய விஷப் பாம்புகளின் தொல்லைகள் மறுபுறமுமாக அன்றைய நாட்களில் அவதிப்பட்டதாகக் கூறுகிறார்.

## கட்டாக்காலிகள் பட்டினிச்சாவு,

## பறவைகள், ஐந்துக்கள்

## வெடி ஓசைகளால் இடம்பெயர்வு!

"பத்துப் பதினைந்து கடைகள், ஒரு சிறிய ஆஸ்பத்திரி, நீர்ப்பாசன இலாகா, வனபரிபாலன இலாகா, ஒரு சிறிய பொலிஸ் நிலையம், இரு ஆலயங்கள், கருணை நிலையஅநாதை இல்லம் இவை அடங்கியது தான் அன்றைய கிளிநொச்சி."

"அந்த நாளில் இருந்த பொலிஸ் நிலையம் திருட்டுக்களை ஒழிப்பதற்கும், மக்களை நல்வழிப்படுத்தவும் குடியேற்ற வாசிகளது பிரச்னைகளை தீர்க்கவுமே பெரிதும் உதவின.

சார்ஜன்ட் தரத்திலான ஒருவரே இப்பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பானவராக இருந்தார். சட்டம், ஒழுங்கு முதலானவற்றைப் பொலிசார் நிலைநாட்டி வந்தனர்.

"இன்று இதே பொலிஸ் நிலையம்தான் எத்தனையோ

## கே. வி. கே. திருலோகமூர்த்தி

வளர்ச்சிகளைக் கண்டு இராணுவ முகாமாக மாறி மக்களை அழித்துவருகிறது" என்று பாலசண்முகநாதன் தெரிவித்தார்.

1954-ம் ஆண்டு கிளிநொச்சி 'சண்முகா' படமாளிகை நிர்வாகத்தைத் தான் பொறுப்பேற்றதாகவும் அப்போது இந்திராணி தியேட்டர் என்ற பெயருடன் இயங்கி வந்ததாகவும் கூறிய அவர் கிளிநொச்சி மக்களின் அன்றைய பொழுதுபோக்கு திரைப்படம் பார்ப்பது தான் என்றும் தெரிவித்தார். அத்துடன் காட்டுப் பன்றிகளும், யானைகளும் மக்கள் வதியும் இடங்களில் நடமாடி அட்டூழியங்கள் செய்து வந்ததென்றும் காட்டுப்பன்றி ஒன்று தம் கண் முன்னாலே ஒரு பருவப்பெண்ணை அடித்துக் கொன்றதென்றும் கூறினார்.

ஆனி 4-ம் திகதி சம்பவத்தின்போது தமது உறவினர் ஒருவரும், இன்னும் பல நல்ல நெருங்கிய நண்பர்களும் பலியாகிவிட்டதாகக் கூறி வருத்தப்பட்ட திரு பாலசண்முகநாதன் இதற்கெல்லாம் ஒரு முடிவு வந்தே தீரும் என்று உறுதி தொனிக்கும் குரலில் கூறினார்.

# குண்டுச் சத்தங்களால் பாலை நிலமாகிவிட்ட கிளிநொச்சி

### இன்றைய கிளிநொச்சி

அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு கிளிநொச்சி நகரத்தை ஒருமுறை பார்த்து வருவோம் என்ற ஆவல்மேலிட சென்றுகொண்டிருந்தேன். செல்லும் வழிகள் எல்லாம் மனித நடமாட்டத்தைக்காண முடியவில்லை. என்னுடன்கூட வந்த நண்பர் மிகவும்தைரியசாலி. அவர் காட்டிய ஆர்வம் என்னை நகருக்கு அழைத்துச் சென்றது.

நகரில் ஓரிரு தலைகள் தலைகாட்டின. கந்தசுவாமி கோவில் முன்பாக ஆறுமுகம் என்ற வியாபாரியைச் சந்தித்தோம். அவர் கடையில் உள்ள சாமான்களை அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். இது தவிர வேறு சில வர்த்தகர்களும் பொருட்களை வண்டிகளில் ஏற்றிக்கொண்டிருந்தனர்.

எட்டாம் வாய்க்காலில் வசிக்கும் மனோகரன் என்பவருடைய வயோதிபத்தந்தை தம்பிப்பிள்ளை, இராணுவத்திற்கு டிமிக்கி கொடுத்து கடைக்காரர்களின் சாமான்களை தமது வண்டியில் அப்புறப்படுத்திக்கொடுப்பதில் சமர்த்தர். அவரை ஒருமுறை இவ்வாறு சாமான்களை ஏற்றும்போது இராணுவம் தமது முகாமிற்கு கொண்டுசென்றுவிட்டது பின்னர் மாலையில் விடுதலை செய்தது.

கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக கடை வைத்திருக்கும் ஒருவர் வண்டில்ஒன்றை வாடகைக்கமர்த்தி தமது சாமான்களை அப்புறப்படுத்திய பின்னர் பேசிய வாடகைப் பணத்தை வண்டில்க்காரருக்கு கொடுக்காததால் வண்டில்காரரால் கத்திக்குத்திற்கு இலக்கானார். இதையும் இந்த இடத்தில் குறிப்பிடாமல்விட முடியாது.

### ஆலயம் மூடப்பட்ட நிலையில்

கிளிநொச்சியில் பிரசித்திபெற்ற சைவ ஆலயமான அருள்மிகு கந்தசுவாமிகோவில் கடந்த இரு மாதமாக மூடப்பட்டுக்கிடக்கிறது புனிததிரேசார் ஆலயமும் இதே நிலையில்தான் உள்ளது. இவைமட்டுமல்ல கிளிநொச்சி நகரத்தையும் நகரத்தை அண்மிய பகுதிகளில் உள்ள சகல ஆலயங்களும் ஸ்தம்பித நிலையிலேயே உள்ளன.

இந்த ஆலயங்களில் பூசைகள் நடைபெறுவதுமில்லை. மணிஓசை கேட்பதுமில்லை. இதுதவிர சகல அரச அலுவலகளும் நகரப் பகுதியில் மூடப்பட்டே கிடக்கின்றன.

இதேவேளை வீதிகளில் பல நாய்கள் ஆங்காங்கே மரணத்தைத்தழுவி பட்டினிச் சாவை அணைத்திருந்தன. இதன் காரணமாக பலத்த துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. கிளிநொச்சி நகரில் பறவைகளை மிருகங்களை, மனிதர்களை காணமுடியாது. எல்லாமே பயங்கர ஓசைகளுடன் வெடிக்கும் குண்டுசத்தங்களால் இடம்பெயர்ந்துவிட்டன. யுத்தபூமியான கிளிநொச்சி வெறும் பாலைவனமாகவே இன்று காட்சி தருகிறது.

# என்றெழிலும் காலைக்காட்சி?

நடுஇரவில் விழித்திருப்போம் நடுநடுங்கி
நல்விடிவைக் கண்டதில்லை வீட்டைச்சூழ்ந்து
திடுதிடென ஒலிகேட்கும் தேனும்தென்றல்
திகட்டாது மரணபயம் தம்மைச்சூழும்
தொடுவானில் எழுங்கதிரின் எழிலாம் தோற்றம்
தொட்டுளத்தில் இன்பத்தைத் தூண்டாக்காலை
கொடுநெருப்பாய் எரியமனை மக்கள்வாழ்வு
கொதிக்கிறது என்றெழிலும் காலைக்காட்சி.

மலர்வண்டை மயக்குமிசைத் தமிழாம்கீதம்
மனங்குளிரக் கேட்காதெம் மக்கள்ஏக்கம்
உலர்ந்தவுடல் உரிமையற்ற பிணங்கள்நாளும்
உதயத்தில் ஒலிப்பதெலாம் மரணஓலம்
நிலத்தூறும் எழில்வண்ணம் கலைந்தகோலம்
நிம்மதிமெய் நிறைமகிழ்வு தொலைந்துமாள(க்)
கலக்கமிகக் கணவர்சிறு மைந்தர்சொந்தம்
காணாராய்க் குமுறுமனைக் காலைக்காட்சி.

தென்றல்வரும் தீர்வுவரும் விடிவுகாண்போம்
தெள்ளறிவில் நாமிணைந்து களிப்போமிங்கே,
என்றிருந்தெம் சிறைக்கூட்டுள் கனவுகண்டே
எழுதாத கவிதைகட்கோ விளக்கம்சொன்னோம்
வென்றெங்கள் விரக்திகளை விலக்கியோட்டி
வெய்யோனின் கொடுங்கரங்கள் தளிரப்பூமி
நன்றெளிர நம்மினத்தார் நலங்கள்சேர்க்கும்
நல்முடிவைக் காணாதோ காலைக்காட்சி.

செ. மகேந்திரன்

# ஒரு நோக்கு: 'என்னதான் முடிவு'

(நாட்டிய நாடகம்)

யாழ்ப்பாணத்திலே கடந்த சில வாரங்களாகப் பலவகைப்பட்ட மேடை நிகழ்வுகள் நடைபெறுவதை அனைவரும் அவதானிக்கலாம். பெரும்பாலும் சமகாலப் பிரச்சினைகளை மையமாக வைத்தே இம் மேடைநிகழ்வுகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. எத்தனை அழிவுகள் நிகழ்ந்தாலும் எமது கலைப்பாரம்பரியம் அழிவுறாது என்பதனையே இம் மேடை நிகழ்வுகள் காட்டிநிற்கின்றன.

இந்தவகையிலே, அண்மையிற் கைலாசபதி கலையரங்கில் வேல்ஆனந்தன் நாட்டியக்குழுவினர் தயாரித்தளித்த 'என்னதான் முடிவு' என்னும் நாட்டிய நாடகம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது.

சென்றகால ஈழத்தமிழரின் அரசியல் வாழ்வுப் பின்னணியும், நிகழ்கால இளம் தலைமுறையினர் மேற்கொள்ளும் முயற்சிகளும், அம்முயற்சிகள் உதயமாவதற்கான காரணிகளும், வருங்காலத்திலே மேற்கொள்ளவேண்டிய வழிமுறைகளும் 'என்னதான் முடிவு' நாட்டிய நாடகத்தினூடு சித்திரிக்கப்பட்டுள்ளன.

நாட்டியம் என்னும் நிகழ்வு மூலம், ஒரு விஷயத்தை அல்லது கதையை வெளிப்படுத்திக் காட்டுவதே நாட்டிய நாடகம் என்று சுருக்கமாகக் குறிப்பிடலாம். எடுத்துக்கொண்ட பொருள்வகையிலும் நாட்டிய அமைப்பிலும் 'என்னதான் முடிவு' நன்குறவே அமைந்துள்ளது.

வேல்ஆனந்தன் குழுவினரின் நாட்டியம் குறிப்பிடத்தக்க சிறப்புடையதாக அமைந்தது. ஈழத்து நாட்டிய வரலாற்றிலே வேல்ஆனந்தனுக்குச் சிறப்பான இடம் உண்டென்ற கருத்தை யாரும் மறுத்துரைப்பார்கள் என்று நான் கருதவில்லை. வேல்ஆனந்தன், வேல்ஆனந்தனின் மகள், (ஷோபனா) இளைய தலைமுறையைப் பிரதிபலிக்கும் சிறுவர்களில் ஒருவன் (அஜித்) முதலியோரின் நாட்டியம் சிறப்பாக விதந்து குறிப்பிடக்கூடியது.

நாட்டியத்திலே 'முதிர்ச்சி' கண்ட வேல்ஆனந்தன் சிங்களக் காடையனாகத் தோன்றும்பொழுது மிக மிகச்சிறப்பாகப் பாவனைபண்ணினார். நாட்டியக்காரனுக்குக் கற்பனையாற்றல் எவ்வளவு முக்கியமோ அந்தளவுக்கு இல்லாவிட்டாலும், பார்வையாளனுக்கும் கற்பனையாற்றல் முக்கியம் என்பதை இந்த நாட்டிய நாடக அனுபவங்கள் புலப்படுத்தும். வேல்ஆனந்தனின் நாட்டியத் திறனுக்கு அர்ச்சுனனாகத்தோன்றிஆடும் பகுதி நல்லதொரு வாய்ப்பாக அமைந்துள்ளது என்று குறிப்பிடலாம்.

கல்யாணியாக நடித்த வேல் ஆனந்தனின் மகள், நாட்டியமும் 'குலவித்தையோ' என்று எண்ண வைத்துவிட்டார். சிங்களக் கிராமமொன்றிலே வசிக்கும் ஒருதமிழ்ப்பெண் தனது குழந்தைக்குப் பாலூட்டித் தொட்டிலிலே போட்டுத் தாலாட்டுப்பாடும் பாவனை, அந்த நாட்டிய அமைப்பு நெஞ்சைத் தொடுவதாக அமைந்தது. ஈழத்தின் ஒரு 'சுவர்ணமுகி'யாகத் திகழக்கூடியசகல வல்லமையையும் அவரிடம் காணக்கூடியதாக இருந்தது கண்ணனாகத்தோன்றியபோது அவர் இமைகளை வெட்டி வெட்டி அசைத்த விதம் மிகவும் சிறப்பாகவே அமைந்தது.

'என்னதான் முடிவு' நாட்டிய நாடகத்தின் வெற்றிக்குப் பேருதவியாக அமைந்தவை அதிலே இடம்பெற்ற பாடல்களே எனலாம். நல்ல கவிதைகள் அழகான சந்தத்துடன் இடம்பெற்றிருந்தன. கைதேர்ந்த கவிஞன் ஒருவன் இப்பாடல்களையெழுதியுள்ளான் என்ற முடிவுக்கு வந்தேன். பின்னர்தான் புதுவை இரத்தினதுரையே அந்தக்கவிதைகளுக்குச் சொந்தக்காரன் என்று தெரியவந்தது.

நாடகத்தின் இறுதியிலே வரும் ஒற்றுமை விருத்தம் மிகவும் நன்றாக அமைந்திருக்கிறது.

"அடம்பன் கொடியும்
திரண்டால் மிடுக்கு
அறுகம்புல்லும் திரித்தால்
கயிறு
ஒற்றுமை இல்லையேல்
அனைவர்க்கும் தாழ்வு
இப்படி இருந்தால் எமக்கு
என்னதான் முடிவு?

நாட்டிய நாடகத்திற்குரிய வரம்புகளுக்குள் இருந்துவிடுபடாத வகையிலே சமகாலப் பிரச்னையொன்றையெடுத்து வேல் ஆனந்தன் குழுவினர் திறம்படச் செய்துள்ளனர் என்று குறிப்பிடலாம். சில கருத்துக்களைத் துல்லியமாக வெளிப்படுத்த அந்த வடிவம் அவர்களுக்குக் கைகொடுக்க மறுத்திருக்கலாம்,

தொகுத்து நோக்கும் பொழுது இன்றையசூழலிலே, 'என்னதான் முடிவு' சிறந்ததொரு நாட்டியநாடகம் என்பதைப் பார்த்த அனைவரும் ஒத்துக்கொள்வர். நாட்டிய நாடக வரலாற்றிலே 'என்னதான் முடிவு' ஒரு புதிய "உத்தி" என்று துணிந்து கூறலாம்.

எஸ். சிவலிங்கராஜா
விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்

## குறுங்கதை

# தூண்டில் மீன்

வட்டுக்கோட்டையூர்
**த. சிவானந்தன்**

கதிரவன் தன் கரங்களை மெதுவாக விரித்து வானில் தவழ்ந்து கொண்டிருந்தான். அவன் வரவு கண்ட மேகங்கள் நாணத்தால் விலகிக் கொண்டிருந்தன விண்ணகமே செந்நிறமாகிக் கொண்டிருந்தது. ஆனுல் சேயோனின் இதயம் மட்டும் அந்த அற்புத க்காட்சியை ரசிக்காது அந்தக் கடலேயே ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தது.

ஆம் இந்தக் காலைப்பொழுது புலரும் பொழுது தானே சேயோன் கரையை நோக்கி வந்துகொண்டிருப்பான். அந்த வலிமை பொருந்திய கரங்கள் எத்தனை பாரிய மீன்களைச் சுமந்துகொண்டு வரும். இந்நிலையில் வரவுக்காகக் காத்திருக்கும் அவன் மனைவிகூட கதிரவனைக் காணும மேகம் போலாகி விடமாட்டாளா, என்ன?

அவன் நினைவலைகளில் அந்தக் காட்சி சுழன்றபோது அவனையும் அறியாமல் விழிகளில் வழிந்த நீர் அவன் இதயத்தில் பட்டுக் குளிர்ந்தது.



காலம் காலமாகக் கடலையே நம்பி வாழும் குடும்பங்களில் சேயோனின் குடும்பமும் ஒன்று அவனுக்குக் கடல் தொழிலைத் தவிர வேறென்றுமே தெரிய து. தனக்கென குடும்பம், மனைவி, பிள்ளைகள் என்ற ஒரு பாசப்பிணைப்பை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்னும் எண்ணம்கூட உருவானது கடலில் நம்பி வந்த வருமானத்தில் தானே? அந்த வருமானம் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் சேயோனுக்கு இந்த ஆசை கூட வந்திருக்காது

இன்று அவன் குடும்பம் பட்டினியால் படும் துயரத்திற்கும் நிம்மதியற்ற வாழ்க்கைக்கும் காரணமே அந்தக் கடல் வலயச் சட்டம்தானே?

கடல் வலயச் சட்டம், கண்காணிப்பு வலயம் போன்ற அரசின் ஒருதலைப்பட்சமான திட்டங்களால் இன்று எத்தனை ஏழைக் குடும்பங்கள், கண்ணீரில் மிதக்கின்றன. இயற்கையை மனிதனுக்காகப் படைத்தான் இறைவன் என்பதைக்கூட மறந்து தனது சுயநலத்திற்காக திட்டங்களை வகுக்கும் முதலாளித்துவக் கொள்கைகள் என்றே மடிவது திண்ணம்.

''அப்பா எனக்கினி வேலையில்லையாம். இன்றையில் இருந்து வேலைக்கு வரவேண்டாம் என்று முதலாளி சொன்னவர். இனி மூடப்போயினமாம்.''

சர்மிலா கலங்கிய கண்களுடன் கூறிய அந்த வார்த்தையைக் கேட்டுச் சேயோன் கலங்கிப் போனுன். அவன் தலையில் ஓங்கிச் சம்மட்டியால் அடிப்பது போன்ற உணர்வுடன் அப்படியே நிலத்தில் சாய்ந்தான்.

சேயோனின் மூத்த மகள் சர்மிலா. அவள் தான் அந்தக் குடும்பத்திற்கு வழிகாட்டியாகவிருந்தாள். அவளுடன் உடன் பிறப்புக்கள் ஏழு ம்பர். கடல் வலயச் சட்டத்தால் அந்தக் குடும்பம் கதிகலங்கியபோது சர்மிலாவின் உழைப்பு 'ஒரு வேளை' யைப் போக்கியது. அவள் தாயோ நிரந்தர நோயாளி.

சர்மிலா தொழில் செய்து வந்த தொழிற்சாலைகூட மூடப்பட்டமைக்குக் காரணம் அங்கே இருந்துவரும் 'ஷெல்' தாக்குதல் தானும். 'உரலுக்கு ஒரு பக்கம் என்றுல் மத்தளத்திற்கு இரண்டு பக்கம் அடி என்பார்கள்' அதுபோல்தான் இதுவும்.

நிவாரணமாக வழங்கப்பட்ட உணவு முத்திரையைப் பார்க்கும்போது சேயோனுக்த ஆத்திரம் நெஞ்சைப் பிளந்தது, 'கையைப் போக்கி விட்டு காலுக்கு மருந்திடுகிருர்களே, என்று துடித்தான்.

அந்தத் தென்னை மரத்தினடியில் கிடந்து பட்டினியால் குழந்தைகதறும் சத்தத்தையும் அதற்காக அவன் மனைவிபடும் துயரையும், அவள் கூறும் ஆறுதல் வார்த்தைகளையும் அவன் கவனிக்கத் தவறவில்லை.

''என்னடா சேயோன் இப்பிடி எத்தினை நாளுக்குப் பயந்து சாகிறது வந்தது வரட்டும் வாடா போய் மீன் பிடிப்பம்'' என்ற குரல் கேட்டுத் திரும்பினுன் சேயோன். அங்கே மரியதாஸ் வலையுடன் நின்றுன்.

''இல்ல மரியதாஸ் இன்டைக்குத் தூண்டில் போட்டுப் பாப்பம்'' என்றவாறு மரியதாஸுடன் புறப்பட்டான் சேயோன்.

ஆசையுடன் சேயோன் போட்ட தூண்டிலில் அகப்பட்ட மீன், நழுவித் தண்ணீரில் மறைந்தது. கட்டுவலைகளுடனும், இயந்திரப் படகுடனும் அலைமோத எதிர்நீச்சல் போட்ட செயோனுக்கு தூண்டில்போடவேண்டியநிலை ஏற்பட்டதையிட்டு வருந்தினுன்.

''ஐயோ சேயோன் அங்க மேலை பார் பதிவா வருது ஓடுவம் நீ அந்த மதவில படு'' என்றவாறு மரியதாஸ் நடுங்கினுன்.''

சேயோனுக்கு எதுவுமே புரியவில்லை ஓடிச் சென்றவன் கால் இடறுப்பட்டு தண்ணீருக்குள்ளேயே விழுந்துவிட்டான்.

காதைப் பிளக்குமாறு கேட்ட சத்தம் வந்த திசையை நோக்கி விரைந்தான் மரியதாஸ் அங்கே ஒரு முனகல் சத்தம் மட்டும் கேட்டது.

''சேயோன் சேயோன்'' எனக் கதறினுன் மரியதாஸ். சேயோனின் காலிலிருந்து வழிந்த இரத்தம் கடலுடன் சங்கமமாகிக் கொண்டிருந்தது

'ஓ' அந்த இயமன்' தன் கடமையை, முடித்துவிட்டான்.

[யாவும் கற்பனை]

### ஜாக் பாட்

அமெரிக்காவிலுள்ள கென்னடி விமான நிலையத்தில் நுழையும் எந்த கடத்தல் காரர்களுக்கும் ''ஜாக்பாட்'' என்றுல் கடும் பயம்...

''ஜாக்பாட்'' என்றுல் என்ன? வேறு ஒன்றுமில்லை. துப்பறியும் நாய் தான். இந்த 'ஜாக்பாட்'க்கு வயது இரண்டிற்கும் குறைவு. அமெரிக்காவிலுள்ள பண்ணைகளில் அந்நிய நடமாட்டம்; குண்டுகள், பயங்கர ஆயுதங்கள் எதுவாக. இருந்தாலும் 'ஜாக்பாட்' மோப்பம் பிடித்துவிடும். அதற்கு அபாரமூளை, இருபது நிமிஷத்துக்கு ஒருமுறை ''ஜாக்பாட்''க்கு ரெஸ்ட் அவசியம்.

—ஸச்சி

# சுவரொட்டி விளம்பர மூலம் தமிழ் கற்றுத் தேறிய அமரதாச

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்—என்ற பாரதியின் அபிலாஷையை வெறும் தூலமாய்ப் பார்க்காமல், உள்ளார்ந்த அர்த்தத்துடன் நோக்கி, அகற்காகத் தன்னுலியன்ற பணியைச்செய்தவர் அண்மையில் அமரத்துவமடைந்த கே. ஜி. அமரதாச அவர்கள்.

பாரதி, சிங்களத்தீவுக்குப் பாலம் அமைக்க அபிலாஷை கொண்டது, இங்குள்ள தமிழ் மக்களோடு உறவு கொள்வதற்குத்தான் என்றுல் அதில் ஓர் புதுமையும் இல்லை; சிறப்பும் இல்லை. இந்திய மண்ணில் பிறந்த பாரதி, தன் அண்டை நாட்டவரான சிங்கள மக்களோடும் நட்புறவு கொள்ள வேண்டும் என்றே அப்படிக் கூறியிருக்கவேண்டும். ஆனுல், பாரதியின் உலகளாவிய மனித நேய ஆசைநிறைவேறுவது ஒரு பக்கமிருக்க, இத்தீவினையே பாரம்பரிய தாயகமாகக் கொண்டு வாழும் தமிழ்மக்களாகிய நாம், ஓர் உள்ளகப் பாலம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் களைத்துப்போன துரதிர்ஷ்ட நிலையில் வாழ்கின்றேம். அப்படியிருக்கும்போது பாரதியின் இந்த ஐக்கியப் பாலம் அமைக்கும் குரலை ஆர்வத்தோடு உன்னிப்பாகக் கேட்டு ஒரு புரிந்துணர்வுடன் எதிர்த்திசையிலிருந்து அன்புக் கரம்நீட்டியவர் அமரதாச என்றுல் அது மிகையல்ல.

இலக்கியத்தினூடாக அமரதா ஆற்றிய ஐக்கியப் பணிக்கு இந்தப் புரிந்துணர்வே சாரணயாய் அமைந்தது.

சிங்கள மக்கள் மத்தியிலுள்ள ஐக்கியக் குரலைத்தமிழ் மக்களுக்கு எடுத்துச் சொல்லவும், தமிழ்மக்கள் மத்தியில் எழுந்துள்ள விரக்திநிலையினைச் சிங்கள மக்களுக்கு எடுத்துச் சொல்லவும் அவர் எழுத்தை ஓர் ஊடகமாகப் பயனபடுத்தினுர். இந்த அடிப்படையில் சிஙகள எழுத்தாளர்களின் படைப்புக்களைத் தமிழிலும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களைச் சிங்களத்திலும் வழங்கும் நல்லுறவுப் பணியில் ஈடுபட்டுழைத்தார். இந்த அடிப்படையிலேயே பாரதி நூற்றுண்டு விழாவின் போது, அம்மகாகவியின் கவிதைகள் சிலவற்றைச் சிங்களத்தில் மொழிபெயர்த்து சிங்கள மக்கள் மத்தியில் பாரதியை அறிமுகம் செய்தார்.

இனக்கலவரத்தைப் பகைப்புலமாகக் கொண்டு நான் எழுதிய சிறுகதையொன்றைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க மேற்கொண்ட முயற்சியின் பயனுக, அமரதாசவுக்கும் எனக்குமிடையில் மூன்று நான்கு ஆண்டுகளாக ஒரு கடித உறவு ஏற்பட்டிருந்தமை எனக்குப் பெருமையாயிருக்கின்றது. தகவல்களை அறிதல், இலக்கிய விவகாரங்களைப் பரிமாறிக்கொள்ளுதல் என்பவற்றேடு ஒரு குடும்ப நண்பர் போலவே அவர் எழுத்துக்கள் அமைந்திருப்பது மனதுக்கு இனிமையான விஷயம்.

இத்தகைய நண்பரை இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடி மகிழ்ந்த நினைவு என்மனதில் பசுமையாக இருக்கும் அதேவேளை, அவர் மறைந்ததால் வேதனை நிறைந்ததாகவும் இருக்கின்றது.

மிகவும் திறந்த மனத்தோடு இனிமையாகவும், தினைத்துணை அளவு கர்வமில்லாமலும் அன்பாக உரையாடினுர். அரசின் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் 'கொயபல்ஸ்' பிரசாரங்களினுல் அவர் உள்ளமும் சற்றே புகைமூட்டம் பெற்றிருந்தாலும், உண்மை நிலையைக் கேட்டறிவதில் மிகவும் ஆர்வம் காட்டினுர். தற்போது நடைபெறும் அநர்த்தங்களுக்காக மனம் வருந்தினுர். பகைமையற்ற சமூக அமைப்புக்காக நெகிழ்ந்து பேசினுர்; தன்னம்பிக்கையோடு பேசினுர்.

அமரதாச, ஒரு லண்டன் கலைப்பட்டதாரி என்பது எனக்கு ஏலவே தெரியும். அவர் தமிழையும், தமிழ் இலக்கியத்தையும், தமிழ் எழுத்தாளரையும் ஆர்வத்தோடு நேசிப்பதற்கு ஓர் அடிப்படைக் காரணம் இருக்க வேண்டும் என்று எண்ணிய நான், ''பி. ஏ.க்கு நீங்கள் தமிழை ஒரு பாடமாகப்பயின்றீர்களா?'' என்று கேட்டதற்கு, அவர்சிரித்துக்கொண்டு சொன்னபதில் எனக்குப் பெரும் வியப்பாயிருந்தது.

இளம் வயதில் சினிமா போஸ்டர்களைப் பார்த்து அந்த எழுத்துக்களை அவதானித்தே, தான் தமிழ்கற்றதாக சொன்னுர் அமரதாச ''தமிழிலும் சிங்களத்திலும் அச்சடித்த சுவரொட்டிகளிலிருந்து படத்தின் பெயர், நடிகர்களின் பெயர்களையே நான் எழுத்துக் கூட்டிப் படிக்கத் தொடங்கினேன். அதன்பின்னர் கையில் கிடைக்கும் தமிழ் மொழியிலான துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகை நறுக்குகளையெல்லாம் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் எழுத்துக்கூட்டி வாசித்து வாசித்துத் தமிழைக் கற்றுக் கொண்டேன்'' என்று மேலும் சொன்னுர். அப்படிக் கற்று, இன்றைய நவீன தமிழ் இலக்கியப் படைப்புக்களை — நவீன மொழிப் படிமங்களுடனுன படைப்புக்களை — அமரதாச மொழிபெயர்த்த ஆற்றலுக்கு நாம் தலைவணங்கவேண்டும்!

அமரதாச ஒரு சிறந்த பௌத்தர் ஆனமையால், பௌத்த செல்வாக்குள்ள பழையதமிழ் இலக்கியங்களைத் தேடிப்படிப்பதில் மிகவும் ஆர்வம்செலுத்தினுர். 'கொழும்பு பொது நூலகத்திலிருந்து புலியூர்க் கேசிகனின் தெளிவுரையுடன் கூடிய ஒரு மணிமேகலைப்பிரதியும், சாமிசிதம்பரனுர் எழுதிய 'மணிமேகலை காட்டும் மனித வாழ்வு' என்ற நூலின்பிரதியும் கிடைக்கப் பெற்றேன். அவற்றைப் படித்து மணிமேகலையைப் பற்றிய சில சுவையான செய்திகளைச் சிங்களச் செய்யுளாக்கி, ஒரு வானெலி உரையாடலின் போது வாசித்தேன். கடந்த மாதம், சிலப்பதிகாரத்தைப் பற்றிய அதேபோன்ற ஓர் உரையாடலிலும் பங்கெடுத்தேன்'' என்று அவர் ஒரு கடிதத்தில் எழுதினுர். பௌத்த, ஜைன செல்வாக்குள்ள நூல்கள் என்றில்லாமல் மற்றும் தமிழ் நூல்களையும், நவீன இலக்கியங்களையும் தேடிப் படிக்கும் அவரது ஆர்வம் பாராட்டுக்குரியதாய் இருத்தது.

முன்னணிச் சிங்கள இதழ்கள பலவற்றிலும் எழுதிவந்த அமரதாச, மல்லிகை, வீரகேசரி போன்ற தமிழ்ப் பத்திரிகைகளின் மூலமாகத் தமது தமிழ் இலக்கியப் பணியைச் செலுத்திவந்தார். அத்துடன் நில்லாது, கொழும்பில் தமிழ் எழுத்தாளர்கள் கூட்டும் இலக்கியக் கூட்டங்களில் அடிக்கடி பங்குபற்றித் தமது நல்லுறவை வெளிப்படுத்தி வந்தார் சிங்கள-தமிழ் ஐக்கியத்தை வலியுறுத்தி எழுகப்பட்ட தமிழ்ச் சிறுகதைகளை மொழிபெயர்த்துச் சிங்கள சஞ்சிகைகளில் வெளியிட வேண்டுமென்றும், அப்படியான கதைகளை அனுப்பி வைக்கும்படியும் அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார்.

நான் அறிந்தவரை, அவர் எந்த அரசியல் கட்சிகளோடும் தொடர்புகொண்டிருக்கவில்லை. அவரது தூய்மையான இலக்கியப்பணி, அறுபது வயதுக்குப் பின்னரும் கலாசார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் பதவியைத் தக்கவைத்துக் கொண்டிருந்தது. உண்மையான பௌத்தநெறி, மனித நேயத்தையும் இன ஐக்கியத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் அவர் உள்ளத்தில் மலரச்செய்து, இனவாத நெருப்பு எரியும் இக்கால கட்டத்திலும், தாம் பிறந்த நாட்டிலேயே பிறந்து வாழும் சகோதரர்களான தமிழ் மக்கள் மீதும் தமிழ் இலக்கியத்தின் மீதும் பற்றுக்கொள்ள வைத்தது.

'நவசம்ஸ்கிருதி' என்ற சிங்கள காலாண்டுச் சஞ்சிகையில் அமரதாசவால் சிங்களத்தில் மொழி பெயர்த்துப் பிரசுரிக்கப்பட்ட என்கதைக்கு நான் சூட்டிய பெயர் 'நெருப்பு' 1958 இனக்கலவரத்தைப் பின்னணியாக வைத்து எழுதப்பட்ட கதை அது. அதற்கு தீப்பொறி என்ற பொருள்பட சிங்களத்தில் 'கினிஸலு' என்று பெயர் சூட்டியிருந்தார் அமரதாச. அவரது தீட்சண்யத்தை எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை 1958 இனக் கலவரம் ஒரு தீப்பொறிதான் தற்போதுதான் அது நெருப்பாய்ப் பற்றி எரிந்துகொண்டிருக்கின்றது.

அமரர் அமரதாசவின் பெயர் சிங்கள இலக்கியத்தில் மட்டுமல்ல, தமிழ் இலக்கியத்திலும் நீங்காத இடம்பெறும்!

ஸ்ரீராமன். இந்தியாவையும் இலங்கையையும் இணைக்க அணைகட்டியபோது, சின்னஞ்சிறிய அணிற்பிள்ளை மண்ணிற் புரண்டு தன் உடலிற் படிந்த புழுதியை உதறி ஆற்றிய பணிக்கு அதற்கு வழங்கப்பட்ட காவிய அந்தஸ்தைப் போல, சுவரொட்டியில் தமிழ் படித்து, தமிழில் பற்றுக் கொண்டு தமிழ் இலக்கியத்தை நேசித்து அதன் மூலம் இரு இனங்களுக்குமிடையில்ஐக்கிய பாலம் அமைக்க ஆற்றியபணியினுல் அமரதாசவும் தேசிய கௌரவத்திற்கு உரியவராவர்!

**என். கே. ரகுநாதன்**

# சைவாலயக் கிரியைகள்

ஆசிரியர்:

கோப்பாய் சிவம்

விலை:

**பரிசுப் பதிப்பு: 30 ரூபா**

**சாதாரண பதிப்பு: 25 ரூபா**

கோயில்களில் வழிபடச் செல்பவன் அங்கு நிகழும் கிரியைகளைப் பற்றித் தெரிந்து கொண்டால் வழிபாடு பெரும் பயன் உள்ளதாக அமையும். இவ்வுண்மையைக் கருத்திற் கொண்டே வழிபடுபவர்களுக்கு கிரியையைப் பற்றிச் சிறிதளவாவது தெரிய வைக்க வேண்டும் என்னும் நோக்குடன் இந்நூலாசிரியர் இதனை உருவாக்கியுள்ளார்' என யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர், கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் ஆசியுரையில் தெரிவித்தபடி சைவாலயக் கிரியைகளைப் பற்றி இந்நூல் சிறந்த விளக்கமளிக்கின்றது.

பத்துக்கட்டுரைகளையும் அநுபந்தத் தொகுப்பையும் கொண்டுள்ள இந்நூலின் பல பகுதிகள் ஆலய வழிபாடு செய்பவர்களுக்கு மட்டுமன்றி குருமார்- அர்ச்சகர்களுக்கும் நல்ல விளக்கங்களை வழங்குவனவாக அமைந்துள்ளன.

'...இதனைப் படிப்பதன் மூலம் மேற்கொண்டு இவ்விஷயங்களை ஆராய்ந்தும் அறிஞர்களைத்தேடி அடைந்தும் தமது அறிவை வளர்க்கவேண்டுமென்ற ஆர்வம் அவர்களுக்கு ஏற்படுமானல் எனது முயற்சி பயனுடையதாகும்' என்று நூலாசிரியர் தமது முகவுரையில் குறிப்பிட்டபடி நூலில் பல குறிப்புக்கள் சிந்தனையைத் தூண்டுவனவாய் அறிஞர்களை நாடச்செய்வனவாய் உள்ளன.

'சோதிவடிவமாகச் சுவாலிக்கும் அக்கினியின் வடிவே சிவலிங்கம். தேர், இராஜ கோபுரம் என்பனவும் இதன் வடிவிலேயே அமைக்கப்படுகின்றன'

திருச்செந்தூர் முதலிய தமிழகத் திருக்கோயில்களில் பன்னிருவேளைகள் பூஜைகள் நிகழ்கின்றன.

பக்கு வான்மாவினை வழி நடத்தும் திரோதான சக்தியைச் கொடிச்சீலை குறிக்கின்றது. என்பன போன்ற குறிப்புக்கள் அறிஞர்களை நாடச் செய்யும் தன்மையனவாய்க் காணப்படுகின்றன.

இந்நூலின் அநுபந்தமாக 17 குறிப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன இவ்வநுபந்தம் இப் புத்தகத்தின் பயன்பாட்டை மிகவும் அதிகரிக்கச் செய்கின்றதென்றே சொல்லவேண்டும்.

திருமுறைகளும்கிரியைகளும் என்னும் குறிப்பு முதலிய சில அநுபந்தங்கள் சைவக் கிரியைகளின் அவசியம் பெருமை என்பனவற்றை உணர்த்துவனவாக உள்ளன. நவக்கிரகங்கள் தொடர்பான சில குறிப்புக்கள் முதலிய பல அநுபந்தங்கள் சைவசமயக் கிரியைகளை மேற்கொள்ளும் குருமாருக்கும் பிறருக்கும் தேவையான பல விபரங்களை உதவுகின்றன. 13-ம் 14-ம் அநுபந்தங்களையிட்டு நூலாசிரியரின் அநுபந்தத் தொகுப்புச் சிந்தனையை நன்கு பாராட்டலாம்.

சைவாலயக் கிரியைகளைப் பற்றிய தெளிவான - ஆரம்பமான விளக்கங்களை ஏற்படுத்தும் வகையில் நூலை ஆக்கி உதவிய 'கோப்பாய்-சிவம்' சைவமக்களின் நன்றியறிதலுக்கும் பாராட்டுகளுக்கும் உரியவரே.

பண்டிதர்

தி. பொன்னம்பலவாணர்

## அளவையம்பதி கும்பழாவளை விநாயகர் நான்மணிமாலை

பாடியவர்: ஆசிரியர்

வை. க. சிற்றம்பலம்

வெளியீடு: அளவெட்டி

சைவ வாலிப சங்கம்

நான்மணிமாலை என்பது தொண்ணூற்ருறுவகைப் பிரபந்தங்களில் ஒன்று. ''அது வெவ்வேறு வகையான நான்கு மணிகளைத் தொடுத்தமைத்த மாலை போன்று வெண்பா, கட்டளைக் கலித்துறை—ஆசிரியப்பா ஆசிரிய விருத்தம் என்பன முறையே அந்தாதியாக அமைய நாற்பது செய்யுட்களாற்பாடுவது'' என இலக்கணம் வகுத்தனர் ஆன்ருேர்.

முன்னைய பிரபந்தங்களிற் சில, மக்களைச் சுட்டிப்பாடப்பட்டனவாயினும் பெரும்பான்மைப் பிரபந்தங்கள் கடவுளரைச் சுட்டியே பாடப்பட்டுள்ளது. அந்த அமைப்பில் பாடப்பட்ட ஒரு பிரபந்தமே ''அளவையம்பதி கும்பழாவளை விநாயகர் நான்மணிமாலை''யாகும்.

இந்த நூலில் உள்ள நாற்பது பாடல்களிலும் பக்திச் சுவையொன்றே பொலிந்து விளங்குவது ஒரு சிறப்பாகும். பண்டைய நான் மணிமாலைகளிற் காணப்படும் அகப்பொருள்துறைகளோ, அல்லது அணிகளோ, தொடர்பற்ற வர்ணனைகளோ, இங்கு காணமுடியாது. ''எனை நடத்தும் தெய்வத்தை'' என முதல் வெண்பாவிலே கூறப்பட்டிருப்பதால் நூலாசிரியரின் மனப்பக்குவநிலை அறியமுடிகிறது.

இந்த நூலாசிரியர் தொடர்ந்து பல வருடங்களாக 'கும்பழாவளைப் பிள்ளையாருக்கு மனம் வாக்குக் காயம் என்னும் முக்கருவிகளாலும் ''ஒண்மையாம் உணர்விஞேடும்'' தொண்டாற்றி வந்தவர். அந்தத் தொண்டின் மூலம் அவரறிந்த உண்மைகள் பாடல்களில் ஆங்காங்கே பரந்து காணப்படுகின்றன.

''வளவிய கும்பழா வளை தனில்
முதல்வன்
நல்ல வெலாந்தரு நானிலக்
கற்பகம்
எல்லையி லடியார் இயைந்து
தொண் டாற்றித்
தொல்லைகள் தீர்ந்தனர்
தொடர்ந்தால்
ஒல்லைவந் தென்னெனும்
உண்மையிஃ துலகீர்'' என்றும்

''வியந்தும் விரும்பியும்
ஃவத விநாயக் என்றிருந்
தால் பயந்த இகபரப்
பான்மைக ளோங்கப் பய
னளிக்கும்''

என்றும் வரும் செய்யுளடிகள் அவர் தம் சொந்த அநுபவத்தையே கூறுவதாக உள்ளன. நூல் முழுவதையும் படித்தால் மேலும் எத்தனையோ உதாரணங்களை அறியலாம்.

ஆரவாரம் இல்லாத அமைதியான ஆற்ருேட்டம் போன்ற அழகிய நடை, யாரும் இலகுவில் விளங்கக்கூடிய சொற்களின் அமைவு, யாவற்றிலும் மேலாக செய்யுள் யாவற்றிலும் உயிராக இழையோடி நிற்கும் பக்திச் சுவை, இவை யாவும் இந்த நான்மணிமாலையின் சிறப்பிற்குக் காரணமாகின்றன.

இலக்கியங்கள், புராணங்கள், திருமுறைகள் ஆகியவற்றில் இந்நூலாசிரியருக்குரிய சிறந்த அறிவாற்றல் விநாயகர் பக்தியாலே கூர்மையடையப்பெற்று விளங்குவதே இந்தச் சிறந்த நான்மணிமாலைக்குக் காரணமாகும்.

வ. குகசர்மா

## சாயி சொன்னது

பாடசாலையில் பாஸ் மார்க்ஸ் எடுப்பதற்கு கஷ்டப்பட்டு ஒருவர் முப்பத்தைந்து புள்ளிகள் எடுக்கின்ருர். பின்பு ஆசிரியனுகின்ருர். இவரால் மாணவர்கட்கு எவ்வளவு அறிவு தரமுடியும். இப்படி சாயிபாபா ஒரு கட்டுரையில் எழுதியுள்ளார்.

—பாணபத்திரன்

## குருடன்

அதோ அண்ணு அதோ பார்
ஐயோ பாவம் அந்த கன்
உதவி செய்தார் யாரு மின்றி
உலைகி ருன் ஊரெ ல்லாம்

தடி ஒன்றைக் கையி லேந்தித்
தட்டித் தட்டி நடக் கிருன்
அடிக் கொருகால் தரிக் கிருன்
அடி எடுக்கத் தயங் கிருன்

மதிலு டனே மோது கிருன்
மரத்தைக் கட்டிப் பிடிக்கிருன்
எதிரி லுள்ள கல்லின் மீது
இடறுப் பட்டு வருகி ருன்

தோளிற் தோற்பை ஒன்றைத்
தொங்க விட்டி ருக்கி ருன்
வேலைக் கூண் தானு மின்றி
வீதி யிலே திரிகி ருன்

கதி யின்றி அலைகி ருனே
கடவு ளுமா இரங்க வில்லை
'விதி' என்று விளம்பு கிருர்
வேடிக் கை பார்ப்ப வர்கள்

தடியை எட்டிப் பிடி அண்ணு
தனியே விட்டுச் செல் வதா?
இடி பட்டு வீழ்ந்திட் டால்...
இக் குருடன் நிலை என்னுகும்?

அடுத்த புதுத் தெருவிற் ருன்
ஆளுநர் முதி யோர் இல்லம்
உடன் அழைத்துச் செல்லு
வோம்
ஒப்ப டைத்துப் பள்ளி
செல்வோம்

—மணிமன்றன்

## புதிய புத்தகம்

### சத்தியசீலனின் 'ஐஸ்கிறீம்! ஐஸ்கிறீம்!'

''கனிப் பாப்பா, அம்மா சொல்லைக் கேட்கவேணும். பனிப்பாகு இவ்வளவும் உனக்குக் காணும்'' கனிப்பாப்பாவுக்குக் கரடி அம்மா கூறும் அறிவுரை இது. அது சரி. 'பனிப்பாகு' என்ருல் அது என்ன? இப்படிக் கேட்கத் தோன்றுகிறதல்லவா?

'ஐஸ்கிறீம். ஐஸ்கிறீம்' என்ற சிறுவர் பாடல் நூலும் இப்படி ஒரு விஞவோடுதான் ஆரம்பிக்கிறது.

''பனிப்பாகு என்ருல் அது என்ன பாப்பா? இனிப்பாகக் குளிரும்; அது என்ன பாப்பா? கனிப்பாகும் சேரும்; அது என்ன பாப்பா? இனிப்பார் நீ விடையை, அடுத்த பக்கம் பாப்பா.'' அப்படியே அடுத்த பக்கத்தையும் புரட்டித்தான் பார்த்துவிடுவோமே.

''பாப்பா உனக்கு விருப்பமான பனிப்பாகு ஐஸ்கிறீம். பாட்டிகூடக் கேட்டுவாங்கும் பனிப்பாகு ஐஸ்கிறீம். அப்பா உனக்கு வாங்கித்தாற ஐஸ்கிறீம்! ஐஸ்கிறீம்! அமுதமாக இனிக்கும் இந்த ஐஸ்கிறீம்! ஐஸ்கிறீம்!'' இப்படிப் பாட்டாகவே தரப்படுகிறது விடை.

'பனிப்பாகு' என்ருல் இப்பொழுது நமக்குத் தெரியும். 'குளிர் அமுதம்' என்ருல் என்ன என்று கூறமுடியுமா? மருமகள் கேட்கிருள் குளிர் அமுதம் குடிக்கவேண்டும் என்று! மாமாவுக்கு அது விளங்கவில்லைப் போலும். தேவலோகம் போகவேண்டும் என்கிருரே?

பாப்பாக்களுக்கு இனிய பாகுக்கு மட்டுமல்ல, பழத்துக்கும் ஒரு பாடல் இருக்கிறதே.

காயாகிக் கனியாத
பழம் என்ன பாப்பா?
கடிக்காமல் தின்னுகிற
பழம் என்ன பாப்பா?
வாய் எல்லாம் குளிருகிற
பழம் என்ன பாப்பா?
வண்டியிலே கொண்டுவரும்
பழம் என்ன பாப்பா?

இதைக் கேட்டு மருமகள் சிரிக்கிருள். 'குளிர் அமுதம் என்ருல் ஐஸ்கிறீம் மாமா' என்று கூறுகிருள். மாமா மகிழ்கிருர்; கெட்டிக்காரி என்று மருமகளைப் பாராட்டுவதோடு மட்டும் நின்றுவிடாது 'கோணிலே' குளிரமுதமும் வாங்கித் தருகின்ற மாமா ''அப்பாவிடம் நல்லதமிழ் படிக்கவேண்டும். பின்பு ஔவையாரைப் போல நீயும் எழுதவேண்டும்'' என்று கேட்டு வைப்பதும் அருமையாகத்தானிருக்கிறது.

இப்படியாக இனிக்கும் பாடல்களோடும், பாட்டோடு போட்டியிடும் படங்களோடும் பதினறு பக்கங்களில் வெளிவந்திருக்கும் இச்சிறுவர் சின்னூலின் ஆசிரியர் பா. சத்தியசீலன். விலைரூ. 5.75 கிடைக்குமிடம் சிறீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

—ஆனந்தன்

## சொத்தின் மகிமை

தந்தையைக் கொலை செய்தவனை மகன் மன்னித்து விடுவான்! ஆனல் தகப்பனின் சொத்துக்களைச் சூறையாடியவனை மகன் மன்னிக்கமாட்டான் என ஓர் அரசியல் சாணக்கியன் சொல்லி வைத்தான். அவன் யார் தெரியுமா?

இத்தாலியின் அரசியல் சாணக்கியன் மாக்கியவல்லியே அவர்.

— அம்பலம்.

# தேவாரத் திருப்பதிகங்களில்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

'இப்பதிகம் தருமை யாதீனத்து அடியார்களில் ஒருவரும் ஆதி குமரகுருபர சுவாமிகளை வித்தியா குருவாகக் கொண்டவருமாகிய வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் இயற்றியது என்பர்.

இக்குறிப்பை பதிப்பாசிரியரோ வெளியீட்டாளர்களோ ஆய்ந்தறியாமல் எழுதியிருக்கமாட்டார்கள். இப்பதிகத்தின் பதினேராம் பாடல் வருமாறு:-

''மதமுடைக் களிறுசெற்ற
மாமறைக் காட்டுளானைக்
கதவடைத் திறமுஞ்செப்பிக்
கடிபொழிற் காழிவேந்தன்
தகவுடைப் புகழின்மிக்க
தமிழ்கெழு விரகன்
சொன்ன
பதமுடைப் பத்தும்வல்லார்
பரமனுக் கடியர்தாமே''

பதிகத்துக்கு எழுதப்பட்ட அடிக்குறிப்பின்படி இப்பதிகம் சம்பந்தனல் பாடப்படவில்லை: வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளால் பாடப்பட்டது. காழிவேந்தன் தமிழ்கெழுவிரகன் என்பன தேவார மரபில் சம்பந்தனைக் குறிக்கும் தொடர்கள். பதிகத்தின் பதினேராம் பாடல் பதிகம் சம்பந்தனல் பாடப்பட்டது என்று கூறுகிறது. இந்த முரண்பாடு எப்படி ஏற்பட்டது! முரண்பாடு ஏற்பட்டமைக்குரிய காரணங்களைப் பின்வருமாறு கற்பனை செய்யலாம்.

### கற்பனைகளுக்கு இடம்

1. வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் பாடிய வெள்ளிப்பதிகத்தைச் சம்பந்தன் திருடி அதைத் தான் பாடிய பாடலாகக் காட்டுவதற்காக, தனது பதிகங்களின் இறுதியில் தான் பொறித்தது போன்றதொரு முத்திரையை பதினேராம் பாடலைத் தம்பிரான் சுவாமிகள் பாடிய பதிகத்துக்கும் பொறித்திருக்கலாம்.

2. தம்பிரான் சுவாமிகள் தம்மைச் சம்பந்தன் எனக் கற்பனை செய்து, சம்பந்தனுக நடித்து ஒரு பதிகத்தைப் பாடியிருக்கலாம்.

3. சம்பந்தன் பதிகங்களால் கவரப்பட்ட ஒருவர், அப்பதிகங்கள் ஒவ்வொன்றையும் சிறப்பித்து, ஒவ்வொரு பாட்டைப்பாடிஅவ்வப்பகிகங்களின் இறுதியிற் சேர்த்திருக்கலாம். அவ்வகையில் தம்பிரான் சுவாமிகள் பாடிய பதிகத்தையும் சம்பந்தன் பாடிய பதிகமெனக் கருதி அதைச் சிறப்பித்துப்பாடிய பாட்டை வெள்ளிப்பதிகத்தின் இறுதியிற் சேர்த்திருக்கலாம்,

மேலே தரப்பட்ட கற்பனைகளைவிட, வேறு கற்பனைகளையும் கற்பனு சக்தி படைத்தவர்கள் உருவாக்கக் கூடும். எவர் எதைக் கற்பனை செய்தாலும் எவர் எந்தக் கற்பனையை ஏற்றுக் கொண்டாலும் அவர் மேலே தரப்பட்ட முதலாவது கற்பனையை ஏற்றுக்கொள்ளார்.

எனவே மேற்குறித்த பதினேராம் பாடலைப் பாடியவர் யார் என்னும் விஞ எழுகின்றது. இவ்விஞவுக்குரிய விடை எதுவாயுமிருக்கலாம். ஏனெனில் யார் பதிகப் பயன் கூறும் இப்பாடலைப் பாடியவர் என்பதை ஆராயும் நோக்குடன் வெள்ளிப்பதிகம் இங்கு எடுத்துக்சொள்ளப்படவில்லை. சம்பந்தன் பாடலுக்குப் பதிகப் பயன் கூறும் பாடலொன்று சம்பந்தன் தவிர்ந்த வேருெருவரால் பாடப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே வெள்ளிப்பதிகம் இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

இதுவரை தேவாரத் திருப்பதிகங்களில் இடைச் செருகல்களும் மாற்றங்களும் இடம் பெற்றிருக்கின்றன என எண்ணுவதற்குரிய காரணங்கள் இருக்கின்றன என்பது ஓரளவுக்கு எடுத்துக்காட்டப்பட்டது.

அருளாளர்களால் பாடப்பட்ட தேவாரங்கள் தமிழ் வேதங்கள். அவை மந்திர சக்தி படைத்தவை. அவற்றில் இடைச்செருகல்களும் திரிபுகளும் செய்யப்படின், அவை திருப்பதிகங்களின் புனிதத் தன்மையை மாசுபடுத்தும். அவற்றின் புனிதத்தன்மை பேணப்படவேண்டும். எனவே தேவாரங்களில் இடைச்செருகல்களும் திரிபுகளும் இடம் பெற்றிருக்கின்றன என்பதை ஆராய்ந்து அப்படி ஏதாவது இருப்பின் அவற்றைக் களைவது கற்றறிந்த சைவச் சான்ருேர் கடன்.

### நாவலர் வழி

இதைக் குறிப்பிடும்போது நாவலர் பெருமான் பதிப்பித்த பதினேராம் திருமுறையில் இடம்பெறும் பின்வரும் பகுதியைக் குறிப்பிடுவது தவிர்க்க முடியாதது. அப்பகுதி வருமாறு:

,,தேவாரத்திற் போலவே பதினேராம் திருமுறைப் பிரபந்தங்களிற் சிலவற்றினும் சில செய்யுள்களும் அடிகளும் சீர்களும் இறந்து போயின. இறவாதுள்ளவைகளிலும் பல மிகப் பிறழ்ந்திருக்கின்றன. பலவிடங்களினின்றும் வருவிக்கப்பட்ட பிரதிரூபங்களெல்லாவற்றிலும் இக்குறைபாடு ஒத்திருக்கின்றது. ஆதலாற் சிற்றறிவினையுடைய பசுவர்க்கத்துட்பட்ட சிறியேன் சிவாநுபூதி பெருவாழ்வுடையோர் திருவாக்கிலே இறந்தவற்றைப் பூர்த்திசெய்தற்கும், பிறழ்ந்தவற்றைவேறு பிரதிருபங் காணுது திருத்திவிடுதற்கும் அதிகாரியல்லேன்'

மேலே கூறப்பட்ட காரணந்தான் இதுவரை தேவாரங்களில் இடம்பெற்ற செருகல்கள் நீக்கப்படாமலும், மாற்றங்கள் திருத்தப்படாமலும் இருப்பதற்குரிய காரணம் என நம்பலாம் அதனல் இன்றும் எங்காவது தேவாரத் திருவேடுகள் இருக்குமானல் அவை பேணப்பட்டு ஆராயப்படவேண்டும்.

நினைவில் வைத்திருங்கள்

பாதுகாப்பான இடம்

இன்று BEER GARDEN இல்

Beer with Sea-Food
Omlette Rs. 30/-

A/C or Non A/C ROOM 50/- to 200/-

Chinese Meals - 25/- to 40/-
Chinese Soup - 15/- to 25/-

Also Orders undertaken for:

WEDDING RECEPTION
BIRTHDAY PARTIES
COCKTAIL PARTIES

Etc. Etc. Etc. Etc. Etc.

HOTEL GNANAM'S

299, CLOCK TOWER ROAD, JAFFNA.
Telephone:- 22082 — 23067.

Safety Travels
யாழ் - கொழும்பு பஸ்சேவை
ஆசனங்கள் பதிவு செய்யப்படும்.
வெளிநாட்டு தொலைபேசித் தொடர்புகளும் செய்துகொடுக்கப்படும்.

(A-1073)


## டெய்ரானிக்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
ரான ஆல் என்ற தொழிலதிபர் சுகவீனத்தால் மரணமானார்.

சில காலத்தின் பின்னர் இதே ஃபரோ மன்னரின் சில ஆபரணங்களை பாரிஸில் காட்சியில் வைப்பதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட எகிப்தின் கலைத்திணைக்கள இயக்குநர், ஒருசிலமணி நேரத்தில் இறந்து போனார்.

★

72-ல் இதே ஃபரோவின் தங்கமுகமூடி பிரிட்டிஷ் மியூஸியத்துக்கு எகிப்திலிருந்து சுப்பலேற்றப்பட்டவிருந்த தினம் எகிப்து கலைத் திணைக்கள இயக்குநர் டாகடர் பெஹ்ரெஸ் திடீரென மரணமடைந்தார். டாக்டர் பெஹ்ரேஸ், ஃபரோக்களின் சாபம்பற்றி தெரிந்திருந்ததுடன் அவருக்கு முன் அப்பதவியிலிருந்தவர் தன் பாரிஸ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டபின் மரணமானவர்.

ஆயினும் அந்த முகமூடியும் மற்றும் சில ஆபரணங்களும் பிரிட்டன் அனுப்பப்பட்டன.

இவற்றை பிரிட்டன் கொண்டுவந்த பிரிட்டிஷ் விமானப்படை விமானத்தின் 6 ஊழியர்களும் பிரிட்டன் கொணடுவந்து 5 வருடங்களினுள் ஒன்றில் மரணமடைந்தனர், அல்லது மிகவும் துரதிர்ஷ்ட வாழ்க்கையை வாழ வேண்டியதாயிற்று!

இவ்வாறு தமது 'உறக்கத்தைக்' கெடுத்த அனைவரினது உயிரையும் பலிகொண்ட சாபம்தான் 'டெய்ரானிக்' கையும் பலிகொண்டிருக்கலாம்.

★

1912ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ம் திகதி ஃபரோ ராணி ஒருவரின் சடலம் [மம்மி] அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டது.

அந்த மம்மியிலிருந்த ஆபரணம் ஒன்று.......

டெய்ரானிக்கப்பலில் தலைவரின் அறையில் பாதுகாப்புக் கருதி வைக்கப்பட்டிருந்தது.

அதுதான்.........

கப்பலைக் காப்பாற்ற வேண்டிய தலைவர்தமதுக மையை சரிவரச் செய்ய இயலாமல் செய்யுமளவுக்கு தனது 'சக்தியை' பிரயோகித்ததோ?


# VACANCIES

## Assistant Director

Qualification:- Candidate should have recognised Engineering degree and charter membership of a recognised professional institution or post graduate degree in Engineering field

Experience:- Minimum 10 years of service after graduation in an executive position (lecturing and administration).

Age:- Below 50 years preferably

Salary:- Total remuneration will be about Rs. 3,300/- p m all inclusive

Apply with full bio-data giving two referees, before 15th September 1986 to:


DIRECTOR,
Jaffna College
Technical Institute,
Vaddukoddai

[A-1162]

தமிழ் ஈழத்தில், தலைநகருக்கு வெளியில் மானிப்பாயில் பாதுகாப்பான சூழலில் அமைந்திருக்கிறது

சர்வதேச தொலைத்தொடர்பு நிலையம்

நொடிப்பொழுதில் ரெலெக்ஸ் சேவை




INTERNATIONAL COMMUNICATION COMPLEX
MANIPAY.

உள்நாட்டு — வெளிநாட்டு தொலைபேசி
TELEPHONE — TELEX

★ தொலைத் தொடர்பு
★ இரவு — பகல் 24 மணிநேரமும் தொடர்ச்சியாக சேவையாற்றுகிறது
★ தன்னியக்க மின்பொறிக்கருவிகள் பொருத்தப்பட்ட ஒரேநிறுவனம் மட்டுமல்ல கைதேர்ந்த தொலைத்தொடர்பு ஊழியர்களின் சேவையும்வழங்கப்படுகிறது.
★ குளிரூட்டப்பட்ட அறைகளில் இதமான தொலைத்தொடர்பு சேவை ★

இன்ரநாஷனல் கொமினிகேஷன் கொம்பிளெக்ஸ்

282 A, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.

★ வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ளும்போது இலங்கை நாணயத்தை வீணாக்காமல் வெளிநாட்டு நாணயத்தில் கட்டணம் செலவு செய்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
★ இதற்கான ஒழுங்குகளை நேரில் செய்துகொள்ளலாம்.
★ உங்களுக்கு சேவை செய்வதே எமது குறிக்கோள்.
★ இரவு — பகல் சேவைக்கு காத்திருக்கின்றோம்.

(A 1072)

## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கொழும்பில் இருந்து
நேரடிப் பிரயாணம் உடனுக்குடன்
செய்து கொடுக்கப்படும்

சவூதி – கிளீனேர்ஸ் (Labourers)
குவைத் – வீட்டுக்கு (Drivers)

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள்
அத்துடன்
PASSPORT BOND ஆகியனவும் தாமதமின்றி
செய்து கொடுக்கப்படும்.

**GROUP ATLANTIC**
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[அடைக்கலமாதா கோவில் முன்பாக]
[A 1065]



## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா

5-ம் திகதி செல்லவிருக்கும் (05-09-86) குறுப்பில்
சேர விரும்புபவர்கள் உடன் கடவுச் சீட்டுடன்
தொடர்பு கொள்ளவும்.
அத்துடன்

★ பிரான்ஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளிற்கு எமது பிரதிநிதி
அழைத்துச் செல்லவுள்ளார்.

அவுஸ்திரேலியா
செல்வதற்கு விசா ஒழுங்குகள் செய்து
கொடுக்கப்படும்.
மற்றும்
பாஸ்போர்ட், பொன்டிங், ரிக்கற், விசா
என்பன குறைந்த செலவில் செய்து
கொடுக்கப்படும்.

**லிப்ருஸ் லிமிட்ரெட்**
R. G. பில்டிங்,
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[A-1070]



## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க்
(இடைநிறுத்தப்பட்ட
எமது டென்மார்க் பயணம்
மீண்டும்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது)
கொழும்பிலிருந்து
நேரடிப் பிரயாணம்
(வாரத்தில் இருமுறைப்
பயணம்)

லிபியா – (Labourers)
சவூதி – கிளீனேர்ஸ்
குவைத் – கிளீனேர்ஸ்
ஈராக் – ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள்
அத்துடன்
பாஸ்போட், பொன்ட், ரிக்கற்றிங்
ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

**யூனிவேர்சல்**
**ஏஜென்சி**
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[ ஆயுர்வேதக்கல்லூரிக்கு அருகாமையில்
பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ]
(A 1044)


## முன்தகைமை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலைக்குப் பிரேத அறைக் குளிரூட்டிகள் வழங்குதலும், நிறுவுதலும்

மாவட்ட அமைச்சு, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலையில் மொத்தம் பன்னிரண்டு தட்டுகளைக் (Drawers) கொண்டவையும் முழுமையான அம்சங்களை உள்ளடக்கியவையுமான பிரேதஅறை குளிரூட்டிகளை வழங்குவதற்கும், நிறுவுவதற்கும் தகுதியுள்ள நிறுவனங்களைப் பதிவுசெய்ய யாழ்ப்பாண மாவட்ட அமைச்சு உத்தசித்துள்ளது. அனுபவம், விற்பனையின்பின் மேற்கொள்ளப்படும் பராமரிப்புச் சேவைக்குரிய வசதிகள் ஆகியன பற்றிய விபரங்கள் தரப்படல் வேண்டும்.

மேலே காட்டப்பட்டுள்ள விபரங்களை 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம திகதிக்கு முன்பதாகக் கீழ்க் காணும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

"திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர்,
கச்சேரி, யாழ்ப்பாணம்"
யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.
கச்சேரி,
யாழ்ப்பாணம்.
1986 ஆகஸ்ட் 22 ஆம் திகதி
[A 1174]

## யாழ். மாவட்டக் கலாசாரப் பேரவை தவில், நாதஸ்வரக்கலை உபகுழு நடாத்தும் பயிற்சி வகுப்பு

1. எதிர்வரும் 12 - 10-86 விஜயதசமி தினத்தன்று ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான சூழலில் ஆரம்பிக்கப்படவிருக்கும் தவில் நாதஸ்வரக் கலைப்பயிற்சி வகுப்பிற்குச் சேரவிரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

2. விண்ணப்பதாரிகள் 10 வயது தொடக்கம் 20 வயதிற்கு மேற்படாதவராயும் தவில் நாதஸ்வரக்கலை பயல விருப்பார்வமுடையராயும் இருத்தல் வேண்டும்.

பயிற்சி வகுப்புகள் ஆரம்பத்தில் சனி, ஞாயிறு தினங்களில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான சூழலில் அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் பிரபல்ய தவில், நாதஸ்வர கலைஞர்களினுல் கற்பிக்கப்படும் பயிலுநருக்கு மதிய போசனமும் வழங்கப்படும்.

3. விண்ணப்பங்கள் 10 - 09 - 86 ன் முன் கிடைக்கக்கூடியதாக தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம். தெல்லிப்பழை எனும் விலாசமிடப்பட்டு பதிவு செய்யப்பட்ட தபால்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களை நேர்முகமாகவும் தேவஸ்தான அலுவலகத்தில் கையளிக்கலாம். இவ் விண்ணப்ப தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் "தவில், நாதஸ்வர பயிற்சி" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

வை. மு. பஞ்சலிங்கம்,
தலைவர்,
யாழ். மாவட்ட கலாசாரப் பேரவை
யாழ் மாவட்டசெயலாளரும்,
அரசாங்க அதிபரும்
20 - 08 - 86. (A-1173)

## 4-வது பிறந்ததின வாழ்த்து



செல்வன்
G. பிரதீப்

விஜி-கோ உரிமையாளர் கோபால் - விஜயாம்பாள், தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரதீப் தனது 4-வதுபிறந்ததினத்தை [இன்று] 24 - 8 - 86 தனது இல்லத்தில் கொண்டாடுகிருர். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மாமார், அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தி, மச்சாள்மார், மச்சான்மார், அண்ணன்மார், அக்காமார், தம்பிமார், தங்கச்சிமார் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிஞர்கள்.

வி ஜி - கோ,
105, சட்டநாதர் றேட்,
நல்லூர், யாழ்ப்பாணம்
(C-4182)

## இவ்வார---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
முண்டு. வேவுக்கணை தொடுப்பதற்கும் சிலர் முனைவர். வாகனச் சாரதிகள் அவதானம் வேண்டும். குடும்பச் சச்சரவுகளைத் தவிர்த்து நடக்கவும்.

### விருச்சிகம்

குடும்பத்திலும் பரவசமான சூழ்நிலை தென்படும். இனபந்துக்கள் தொடர்பும் பெருகும். பிரயாணமொன்றும் மேற்கொள்ளப்படலாம். நீண்ட நாள் செய்தி இன்று கைகூடும் பிதா வழியாலும் மகிழ்ச்சியுண்டு.

### தனுசு

தன வரவும் தரும சிந்தையும் மேலோங்கி நிற்கும். முதலீடு செய்வதற்கு உகந்த தினம். இடம் பிரிவும் ஏற்படலாம். இனபந்துக்கள் கொண்டாட்டமுண்டு கடமையிலும் சிறப்புக்கிடமுண்டு.

### மகரம்

பொருள் மெத்தவும் சேரும். புகழ் வந்து குவியும் சகோதர சந்தோசமும் உண்டு. புதிய வழி மூலம் லாபத்திற்குமிடமுண்டு. இல்லத்திலும் இன்பம் பொங்கும்.

### கும்பம்

தூரத்துச் செய்தி துயரத்தில் ஆழ்த்தும். தொழிலும் மந்த நிலை அடையும். முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை தோன்றும். முகமன் பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கை வேண்டும். தெய்வ வழிபாடு விரும்பத்தக்கது.

### மீனம்

இன்னலின் பின்னல் உங்களைச் சோர்வடையச் செய்யும். ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும். உடல் நலம்பாதிக்கப்படலாம். எதிர்பாராதவிதத்தில்சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும். எதிலும் முன்னெச்சரிக்கை நன்று.

திருமலை
க.வே.ரவீந்திரன்


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜெர்மனி
★ பிரான்ஸ் ★ கொலண்ட்
★ பெல்ஜியம் ★ டென்மார்க்
★ சுவீடன் ★ ஸ்பெயின்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண
ஒழுங்குகளை மேற்கொள்ளவும் மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.
உடன் தொடர்புகொள்ளவும்.

**INTERSUN GROUP,**
சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரி அருகாமை)
மானிப்பாய்.
[A-1029]



கலர் பிலிம்
சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
**கொழும்பு ஸ்ருடியோ**
A 1047

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு கிராமியக் கலைக்குழுவினரின் 'சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்' நாடகம் இன்று மாலை சாவகச்சேரியில் மேடையேற்றப்படவுள்ளது.

## போராளி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பேச்சுக்கள் சென்னையில் அல்லது புதுடில்லியில் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டணிக் குழுவினரின் இலங்கை அரசுடனான பேச்சுக்களை முடித்துக்கொண்டபின்னர் இந்திய அரசின் உயர்மட்டக்குழுவினர் போராளிகள் குழுத்தலைவர்களுடன் இவ்விடயம் குறித்து ஆராயவுள்ளனர். [கூ-எ]


### கடைசி நேர வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Honda C-90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்க 16, கண்டி ரோட், உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். C-4237

### சேவை

உங்கள் விவசாயப் பிரச்சினைகளுக்கு இலவச ஆலோசனைகளைப் பெறுவதற்கு 40 வருட அனுபவமுள்ள கமநல ஆலோசகர் நா. சிவமுத்துலிங்கத்தை [Retd. asst Director of Agric நாடுங்கள். முதலியார் வளவு தலையாளி, சபாபதி ரோட், கொக்குவில். [C-4236]

லிடோ

காலை 10-30, 2-30, 4-30, 6-30.

Dragon Lee-Aa Golden Dragon

Johnnie Chan- As Silver Snake

in

GOLDEN DRAGON SILVER SNAKE

(Karate, Action, Thrills and Color)

Showing first time in Jaffna

இன்று மட்டும்

வெலிங்டன்

வெண்திரையில்

10-30, 2-30, 6-30

சிவாஜி, ஜமுனா

வீரப்பா, நம்பியார்

தங்கமலை ரகசியம்

(புத்தம் புதிய பிரதி)

நாளை முதல்

The Shout

New Release

உஷா மினி

THUNDER

ஆயுதப் படையினர்க்கு சவால் விடும் தனி ஒரு இளைஞன் நவீன ஆயுதத்துடன் பொலிசாரை, பொலிஸ் வாகனங்களை தகர்க்கும் வீரன்.

புதிய வெளியீடு


## வசாவிளான்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மினிமுகாமுக்கருகிலுள்ள பொதுமக்களின் பிரதிநிதிகளும் மயிலிட்டி பிரஜைகள் குழுத்தலைவர் திரு. ப. ரட்ணராஜா தலைமையில் புதிய இணைப்பதிகாரி பிரிகேடியர் கெரி சில்வாவைச் சந்தித்தபோது அவர் தமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளார்.

அடுத்த தவணை பாடசாலை ஆரம்பிப்பதற்காக அப்பாடசாலையை விட்டு ராணுவம் வெளியேறும் திட்டத்தை அவர் உறுதிப்படுத்தியுள்ளதுடன், இதுதொடர்பாக பத்திரிகைகளில் வெளிவந்த முரண்பாடானசெய்தியை மறுத்ததாகவும் தெரிகின்றது.

தமக்கும் பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றும் தமது பிள்ளைகளின் படிப்பிற்கு எவரும் குந்தகம் செய்தால் தனது மனம் என்னபாடுபடுமோ அதேநிலைதான் இந்தப்பாடசாலைகளில் கல்வி பயிலும் பிள்ளைகளின் பெற்றோர் நிலையும் இருக்குமென தமக்குத்தெரியுமென அவர் கூறியதாகவும் அறியப்படுகின்றது. (ஆ)

## ஆதாரக்....

(4ம் பக்கத்தொடர்ச்சி)

1972ம் ஆண்டு புனரமைக்கப்பட்ட தர்மகர்தாசபையே இப்பொழுது செயற்பட்டு வருகின்றது. சபையினரின் பெருமுயற்சியாலும் வழிபடுவோர்களின் ஊக்கத்தினாலும் திருப்பணிவேலைகளை நிறைவுற்று விநாயகப் பெருமான் ஆலயம் புதுப்பொலிவுடன் மிளிர்கின்றது.

### விசேட மூர்த்திகள்

இவ்வாலயத்தில் சித்தி—புத்தி சமேதராக விழங்கும் எழுந்தளி விநாயகர் திருவுருவம் அமைந்துள்ளது. இலங்கையில் வேறு எந்த ஆலயத்திலும் இத்திருவுருவம் இல்லை. அத்துடன் காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட அழகான சிவலிங்கத் திருமேனியையும் இங்குகாணலாம்.

இன்னும் இவ்வாலயத்திற்குரிய தருமச் சொத்துக்களை மீட்பதற்காக வழக்குகள் நடைபெறுகின்றன. குறிக்கப்பட்ட தர்மச் சொத்துக்களின் வருமானங்கள் மூலம் ஆலயபூசை, திருப்பணி என்பனவற்றோடு சைவத் தமிழ் வளர்ச்சிக்கும் இவ்வாலயம் ஒரு கேந்திர நிலையமாக அமையும் என்பதை நம்புகின்றோம் காரணம் முன்னோர் பெறுமதிமிக்க தர்மங்களை நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். அத்துடன் அத்தர்தங்கள் நிரந்தரவருமானம் அளிக்கக்கூடியனவாகும்

இவ்வாலயத்தின் வளர்ச்சிக்படியில் ஆலயத்தைச் சூழவுள்ள மக்கள்தமது பெரும் பணியைச் செய்ய முன்வந்துள்ளார்கள். அன்னாரின் பெரும்பணி சிறப்படைய விநாயகப் பெருமானின் திருவருள் பாலித்துவருகின்றார்.

### விசேடங்கள்

இன்று இவ்வாலயத்தில் மாதப்பிறப்புப் பூசை, சதுர்த்தி துவாதசி, சதயம் பிள்ளையார் கதை, திருவெம்பாவை ஆகியபூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

காலம் சென்ற வித்துவான் திரு. க. கி. நடராஜன் அவர்கள் விநாயகப்பெருமான்மீது திருவூஞ்சல் பாடியுள்ளார் வெள்ளிக்கிழமைதோறும் கூட்டுப்பிரார்த்தனை சிறப்பாக நடைபெறுகின்றது.

இவ்வாலயத்தின் சகல விபரங்களும் அடங்கிய ஆலய வரலாற்றுடன் மகாகும்பாபிஷேகச் சிறப்புமலர் ஒன்றும் வெளிவர முயற்சிகள் நடைபெறுகின்றன.

## குடிநீர் தட்டுப்பாடு

நெடுந்தீவு சனி

நெடுந்தீவில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியினால் குடிநீருக்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இதனால் மக்கள் தண்ணீர் பெறுவதில் பெரும்கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளார்கள்.

கடந்தஆண்டுகளில் இதே காலப்பகுதியில் சமூகசேவை இலாகாவினால் குடிநீர் வழங்கப்பட்டுவந்தது

வரட்சி நிலைமையை அனுசரித்து குடிநீர் வழங்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபருக்கும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு நெடுந்தீவு பிரஜைகள் குழுச் செயலாளர் ஏ. டபிள்யூ அரியநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார். [வா]

## 'பொருளாதாரம் வளர்ச்சியடைய காலம் நீடிக்கும்'

கொழும்பு, சனி

"இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்றினை அடையப்பெற்றாலும் அரசாங்கத்தின் சக்தியிலும் தேசிய வளத்திலும் பெரும்பகுதி புனர்நிர்மானப்பணிகளுக்கு செலவிடப்படவேண்டும்"

இவ்வாறுநிதியமைச்சர் திரு ரொனி டிமெல் கொழும்பில் நடைபெற்ற தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் 13வது விழாவில் பேசும்போது தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்

'நாட்டில் சமாதானம் ஏற்பட்டாலும் பொருளாதாரம் வளர்ச்சியடைய பல ஆண்டுகள் பிடிக்கும்" என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## திருமலையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து கந்தளாயைச் சேர்ந்த காணி உத்தியோகத்தரான பி ஜி குணதாஸ் (36 வயது என்பவர் நேற்று முன்தினம் இரவு வீட்டில் வைத்து துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் 3 பிள்ளைகளின் தந்தையாவார். (மா)

## அதிரடிப்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிட்ட அதிரடிப்படையினர் வீடு வீடாகச் சோதனையிட்டனர்

இந்த நடவடிக்கையின்போது தூக்கத்திலிருந்த 200 க்கு மேற்பட்ட ஆண்கள் கைது செய்யப்பட்டு கல்லடி அதிரடிப்படை முகாமுக்கு சாரிசாரியாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்று அதிகாலை தொடக்கம் மாலை 6மணி வரை விசாரணை செய்யப்பட்டனர்.

இவர்கள் முகமூடிகளின் வழமையான தலையாட்டல் கைங்கரியத்துக்கு உட்பட்ட பின்னர் இறுதியாக 12 பேர் தவிர ஏனையோர்கள் விடுதலை செய்யப்பட்டனர். [மா]

## இராணுவம்...

1ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் மாங்குள முகாமிலிருந்து 8 கவச வாகனம், பி எல் எவ் ட்ரக், டெலிக்கா வான் சகிதம் இராணுவத்தினர் ரோந்து வந்து கொண்டிருந்த சமயம் முறிகண்டியில் வைத்து எம்மவரால் நேரடி மோதல் தொடுக்கப்பட்டது

ஒன்றரை மணிநேரம் மேற்கொண்ட கடும் மோதலின் பின்னர் இராணுவத்தினர் பாரிய இழப்புகளுடன் முகாமினுள் புகுந்து கொண்டனர்

எமது தரப்பில் எதுவித இழப்புகளும் இல்லை'. [மா]


## வட இலங்கையில் ஒரே ஒரு விளம்பர முகவர்கள்

### செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்

மே/பா. யாழ். பீச் இன்

139, கடறகரை வீதி, யாழ்ப்பாணம்.

நிர்வாக இயக்குநர்:

ஜோ. எகட்டன்

உங்கள் வியாபாரப் பொருட்களைக் கவர்ச்சி விளம்பரங்களுடன் உங்கள் வாடிக்கையாளர்களுக்குத் தெரியப்படுத்துங்கள் நாடுங்கள்.

முகவரியை மேலே பாருங்கள்

ஜோ. எகட்டன்

செனித் யாழ். நகர்

விளம்பர வடிவமைப்பு:

ஜோ. எகட்டன்

மணிக்குரல் மேஜர்ஷன்

(A 1178) செனித் ADS.

## கப்பலில் சேர்வதற்கு பிரயாண ஒழுங்குகள்

கப்ரின் ஒபிசர் 1, ஒபிசர் 2, ஒபிசர் 3, எஞ்சினியர் 1, எஞ்சினியர் 2, எஞ்சினியர் 3, எஞ்சினியர் 4, றேடியோ ஒபிசர், எலற்றீசியன், போசன், குக், ஒயிலர் [ஏ. வி] (A. B)

ஆகியோர்க்கு உடன் பிரயாண வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

அத்துடன் பெய்ரூட்டில் பொதுவேலையாளர்கட்கு 15 நாட்களில் பிரயாணவசதிகள் செய்து கொடுக்கப்படும். கடவுச்சீட்டுடன் மூன்று புகைப்படங்களுடன் நேரில் வரவும்.

பாஸ்போட், பொண்ட் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

### நியூ மரியா சிப்பிங் அன் ரவல்

185/3, நியூ லலிதா பில்டிங்,

கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம். [A1027]

## பனம்பொருள் உணவுகள் அறிமுகவிழா

★

பனை அபிவிருத்திச் சபையின்

அனுசரணையுடன்

★

யாழ்பீச் இன்ஸ்

ஆதரவில்

★

ஜோ எகட்டன்

வழங்கும்

★

முற்றிலும் புதியபாணியில் பனம் பொருளினால் உணவுவகைகளை உங்களுக்கு உங்கள் முன்னிலையில் தயாரித்து வழங்கப்படுகிறது.

ஆம்!

07-09-1986 அன்று காலை 10-30 மணிமுதல் இலக்கம் 139 கடற்கரை வீதியில் அமைந்துள்ள யாழ். பீச் இன்சில் உங்கள் அனைவரையும் பங்குபற்ற அழைக்கின்றோம் என்றும் புதுமையை வழங்கும் ஜோ எகட்டன் ஜப்பான் சென்று திரும்பியதும் வழங்குகின்ற யாழ். நகரில் முதல் பனம் பொருள்உணவு அறிமுகவிழா!

இத்திகதியை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்

07.09.1986

விளம்பர வடிவமைப்பு:

*ஜோ. எகட்டன் + மணிக்குரல் மேஜர்ஷன் = செனித்ADS*

[A1178]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

ஞாயிற்றுக்கிழமை 24-8-86

# அ. பு. வா. கழக நிவாரணப் பணிகள் — துஷ்பிரயோகத்துக்கு இடமே இருக்காது!

## பதவி ஏற்பின்போது புதிய தலைவர் சிவத்தம்பி வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஞாயிறு அகதிகள புனர்வாழ்வுக் கழகத்தின் நிவாரணப் பணிகளில் எந்தவகையிலும் துஷ்பிரயோகங்கள் ஏற்படாது தடைசெய்ய வேண்டும், மற்றவர்கள் பார்த்து பின்பற்றும் வகையில் முன் உதாரணமாக அமையவேண்டும், என்று இக் கழகத்தின் புதிய தலைவராகப் பதவிஏற்றுள்ள பேராசிரியர் கா. சிவத்தம்பி வலியுறுத்தியுள்ளார்.

மேற்படி பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டு அங்கத்தவர்கள் மத்தியில் பேராசிரியர் உரை நிகழ்த்தினூர். அவர் கூறியதாவது:

இந்த நிறுவனம் இன்றைய கட்டத்தின் மிக முக்கியமான நிறுவனமாகும். இன்றைய போராட்டத்தினல் பாதிக்கப்படும் மக்களுக்கு உடனடி புனர்வாழ்வு நிவாரணங்களை அளிக்கும் அரசதொடர்பற்ற, சமயச்சார்பற்ற ஒரேயொரு நிறுவனம் இதுவேயாகும். இதனல் நமது பொறுப்பு பன்மடங்காகும்.

'இவ்வேளை நமக்குள்ள ஒரேயொரு கடமை எமக்கு கிடைக்கும் நிதியை நாம் உண்மையாக தேவையுள்ளவர்களுக்கு வேகமாக தாமதமின்றி எவ்வித துஷ்பிரயோகத்திற்கும் இடமளிக்காது வழங்கி அவர்கள் அதனல் நிவாரணம் பெறுகின்ரூர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதேயாகும்.

நாம் பிரதானமாக இருவகையான உதவிகளைச் செய்கின்ரேம்.

ஒன்று குடும்பத்தின் பிரதானமான அங்கத்தினர் ஒருவர் வன்செயல் காரணமாக இறக்கும் போது அக்குடும்பத்திறகு நிதியுதவி செய்தல்.

இரண்டு இறந்தவர்களின் குடும்பத்திற்கும், காயம்பட்டோர் குடும்பத்திற்கும், வீடு வாசல்களை இழந்தோருக்கும் தமது பாரம்பரியமான வாழ் இடங்களை விட்டு பிற தமிழ்ப் பிரதேசங்களில் தஞ்சம் புகுந்தோருக்கும் அவர்கள் இயலக்கூடியளவிற்கு புதிய வாழ்வைப் பெறவேண்டிய உதவிகளைச் செய்தல்.

முதலாவது உடனடியாகச் செய்தல், இது உண்மையில் அத்தியாவசியமாகத் தேவைப்படுபவர்களுக்கு உதவுதல். இரண்டாவது மிக முக்கியமானது, அரசாங்கமே இன்று தமிழ்ப் பகுதிகளில் தமது அபிவிருத்தி திட்டங்களைநடைமுறைப்படுத்தாது ஏறத்தாழ கைவிட்ட இன்றைய நிலையில் அ. பு. வா கழகம் வழங்கும் புனர்வாழ்வுக்கான உதவிக் கொடுப்பனவு மிக முக்கியமானது. மக்கள் சுய உழைப்பை மேற்கொண்டு தமது தேவைகளை பூர்த்தி செய்ய உதவுவதாகுப இது

இந்த உதவியை நாடி நிற்பவர்கள் வேறெந்த கதியுமற்றவர்கள். ஆனூல் இவர்கள் அகதிகள் என்ரூலும் எமக்கு அந்நியர்களல்ல. எமது உறவினர், ஒரே குடும்பத்தினர். எமது இனத்தவர். இந்த அகதிகளை கதியுள்ளவர்களாக்குவதற்கு நாம் முற்றிலுங் பிறநாட்டு உதவிகளை மாத்திரம் எதிர்நோக்கலாகாது.

பிறநாட்டு உதவியில்லாது இந்த பெரும் பணியை செய்யமுடியாது தான். ஆனல் பிறநாட்டு உதவிகள் அகதிகளைக் கதியுடையோர் ஆக்கிவிடாது அவர்களை கதியுடையோர் ஆக்குவது எமது பொறுப்பு.

அவர்கள் எம்முடன் கூடிவாழ வேண்டிய சமூகச் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அவர்களுடைய "புதுவாழ்வு" எமக்கு சிரத்தையுண்டு என்று காட்டும் வகையில் நாம் சிறுதொகையாவது எமது பங்களிப்பாக கொடுக்க முன்வரவேண்டும். உண்மையில் இந்த தொகை எமது ஆர்வத்தை எடுத்துக்காட்டவேயாகும். பணமில்லாதவர்கள் பொருள்களாக உதவி செய்யலாம். இந்த அம்சத்தை நாம் நமது சகோதரர்களிடையே வற்புறுத்தல் வேண்டும். இந்த புனர்வாழ்வுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் அவ்வத்துறைகளில் நிபுணத்துவம் கொண்டவர்களின் ஆலோசனைகளையும் கண்காணிப்புக்கான உதவிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும். (ஆ)

## கிளிநொச்சியில் ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம் ஞாயிறு கிளிநொச்சி நகர்ப்புற சூழலில் அமைந்துள்ள ஐந்து பிரதான பாடசாலைகள் தற்போது மூடப்பட்டுள்ள நிலையில் இருக்கின்றன.

கிளிநொச்சி மகாவித்தியாலயம் கிளிநொச்சி கனிஷ்டவித்தியாலயம், புனித திரேசாமகளிர்வித்தியாலயம், கனகபுரம் அ.த.க.பாடசாலை கிளிநொச்சி சிங்கள மகாவித்தியாலயம் என்பனவே மூடப்பட்டுள்ளநிலையில் உள்ள பாடசாலைகளாகும்.

இப்பாடசாலைகளில் கல்வி கற்ற 6 000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கடந்த மூன்று மாதங்களாக கல்விபயில முடியாதநிலையில் இருக்கின்ரூர்கள். இச்சிறுர்களின் எதிர்காலக்கல்வியைக் கருத்திற் கொண்டு இப்பிரதானபாடசாலைகளின்பெற்ரேர் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்வரும் 25ம் திகதி திங்கட்கிழமைகாலை பந்தன் இந்துமகாவித்தியாலயத்தில் கூட்டமொன்றை கூடி ஆலோசிக்கவுள்ளனர். [வி]

## "தீவிரவாதிகளின் ஆட்சியே வடபகுதியில் நடக்கிறது"
### நுகேகொடையில் அநுரா

கொழும்பு, சனி "வடபகுதி இன்று முற்று முழுதாக தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளது. இதன் மூலம் இந்த நாட்டின் மூன்றிலொரு பகுதி அவர்களின் ஆட்சிக்குட்பட்டு விட்டது." என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா கூறினூர்.

அரசினல் கொண்டு வரப்பட்டுள்ள மாகாணசபைத் திட்டத்தை எதிர்க்கும் முகமாக நுகேகொடையில் இடம் பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போதே திரு அநுராபண்டாரநாயக்கா இவ்வாறு கூறினூர்.

தொடர்ந்து அங்கு பேசிய அவர் "தீவிரவாதத்தை ஒழித்துக்கட்ட அரசு எடுத்த முயற்சிகள் தோல்வி அடைந்ததையிட்டே மாகாணசபை யோசனையை கொண்டுவந்துள்ளது என்றும் கூறினூர்.

## 27-ல் யாழ்....

(-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறும். இம் மௌன ஊர்வலத்தில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள் தொழிலாளர்கள், அரச ஊழியர்கள் பெண்கள் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

மேற்படி மௌன ஊர்வலத்தை மக்கள் பாதுகாப்புக் குழு ஏற்பாடு செய்துள்ளது. [கை-எ]

## வழமைபோல் — செல்வச்சந்நிதியில் அன்னதானம்வழங்கப்பட்டது

வல்வெட்டித்துறை, சனி செல்வச் சந்நிதி ஆலயத்தில் உற்சவ காலங்களில் உற்சவங்கள் நடைபெறுதபோதிலும் அமரர் தவத்திரு முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமியினுல் ஸ்தாபிக்கப்பட்டு நடத்தப்பட்டுவந்த ஆனந்தாச்சிரமத்தில் சந்நிதிமுருகனின் உற்சவகாலங்களில் வழமைபோல் சந்நிதிகோவில் மடங்களில் இருக்கும் ஏழை அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

தவத்திரு மயில்வாகனம் சுவாமிகளின் மறைந்த ஓராண்டு தினமாகிய கடந்த 11ம்தேதி அன்னூரின் நினைவாக விஷேச ஆராதனையும் விஷேச அன்னதானமும் வழங்கப்பட்டது. குறிப்பாக அன்னதானக்கந்தனின் உற்சவகாலக் கடைசி நாட்களான கடைசி நான்குதினங்களும் அன்னதானம் வழங்கப்பட்டது.

ஆச்சிரமமுன்வாசல் பகுதி பாவிக்கப்படாத போதிலும், அடியார்களுக்கு ஆச்சிரம பின்வாசலால் அன்னதானம் வழங்கப்பட்டது.

உற்சவகாலங்கள் அல்லாத சாதாரண நாட்களிலும் கூட ஆற்றங் கரைவேலவனையே நம்பி மடங்களில் தஞ்சமடைந்திருக்கும் ஏழை அடியவர்க்குத் தினமும் தம்மாலான சிறு அளவுஅன்னதானத்தை வழங்கும்பணியை சுவாமிகளின் சீடர்களிலொருவரான மோகனதாஸ் பொறுப்பேற்று நடத்திவருகின்ரூர். [இ]

## சூட்டுக்குப் பலியான இருவர் அடையாளம் காணப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு வவனியாவில் நேற்று முன் தினம் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான இருவரும் சுப்பையா செல்வராஜா [வயது 25 இரு பிள்ளைகளின் தந்தை], சுப்பிரமணியம் சதாசிவம் [வயது 32 3 பிள்ளைகளின் தந்தை] ஆகியோர் என அடையாளம் காணப்பட்டனர்.

புளியங்குளத்துக்கும் கனகராஜன் குளத்துக்குமிடையில் கோவில்த் திருவிழா ஒன்றிற்கு லைட் மெஷின் ஒலிபெருக்கி இரு ரி. வி, டெக்குகள் ஆகியவற்றுடன் ட்ராக்டர் ஒன்றில் ஆறுபேர் சென்றுகொண்டிருந்தபோது காட்டுக்குள் மறைந்திருந்த படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் இருவர் ஸ்தலத்தில் மரணமானது தெரிந்ததே. ஏனைய நால்வரும் ட்ராக்டரிலிருந்து தப்பியோடி தமது வீடுகளுக்குச் சென்றுவிட்டனர். கொல்லப்பட்டோரின் மரணச் சடங்குகள் நேற்று நடைபெற்றன.

இச்சம்பவம்பற்றி வன்னி மாவட்ட பிரஜைகள் குழுவினுல் சம்பந்தப்பட்டோருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது. [ஊ-இ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.

## சங்கம் கடனுதவி

பருத்தித்துறை, சனி பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவு சங்க ஊழியர் நலன்புரி சிக்கன சேமிப்பு சங்கம் 55 உறுப்பினர்களுக்கு சாதாரண கடனாக 55,000 ரூபாவையும், 11 உறுப்பினர்களுக்கு விசேட கடனாக 22,000 ரூபாவையும் வழங்கியுள்ளது.

மேலும் சங்கம் உறுப்பினர்களுக்கான சிறுகடன் உதவிகளையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும். சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

சங்கத்தின் 3வது வருடாந்த பொதுக்கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. எஸ். செல்வராஜா, உப தலைவர் திரு த. இராசசிங்கம், செயலாளர் செல்வி ஜ லூர்த்தம்மா பொருளாளர் திரு. கே. வேலாயுதம் மேலும் ஐவர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (வா)

## மரண அறிவித்தல்

### நாரந்தனை திருமதி தனையசிங்கம் புஸ்கராம்பாள்

நாரந்தனையைச் சேர்ந்த தனையசிங்க முதலியார் புஸ்கராம்பாள் காலமானூர். இவர் தனையசிங்க முதலியாரின் மனைவியும் சிவசாந்தி, பயூரநாதன், சிவகாமி, கபிலநாதன் ஆகியோரின் தாயாரும், சண்முகநாதனின் மாமியாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (டெனியா சின்னப்பர்), சிவன்அம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு, செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் ஆவார். ஈமைக்கிரியைகள் 25-08-86 (திங்கள்) காலை 10-00 மணியளவில் அன்னூரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ரூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: தனையசிங்கமுதலியார், நாரந்தனை.

(C 4232)

### கந்தையா இரத்தினகோபால்

காலஞ்சென்ற மில்க்வைற் ஸ்தாபகர் திரு. V. M. கந்தையாபிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், முன்னைநாள் அர்ஸ்வீனு எஸ்டேட் கினிகத்தன சுப்பிரின்டென்றும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், பாக்கியலீலா தவகோபால் (மில்க்வைற்), இராசகோபால் [மில்க்வைற்], கமலாம்பிகை, நந்தகோபால்[மில்க்வைற்] சிவகோபால்(மில்க்வைற்), விஜயகோபால் (சவுதி), யோகராணி (ஆசிரியை இளையதம்பி மகாவித்தியாலயம், வண்ணார்பண்ணை]. நந்தினி, பிரேமலதா, ராகினி (மாணவிகள் சுண்டுக்குளி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வில்லவராஜா (முகாமையாளர் இலங்கைவங்கி ஸ்ரான்லிவீதி யாழ் ], தெட்சணுமூர்த்தி (முன்னுள் கடதாசி கூட்டுதாபனம் , தேவராணி, ஞானேஸ்வரி, சந்திராதேவி, கௌரி ஆகியோரின் மாமனாரும், கனகராசா (உரிமையாளர்,மில்க்வைற் தொழிலகம்), லோகநாதன்(இளைப்பாறிய ஓவசியர், பெருந்தெருக்கள் திணைக்களம்], வவனுதன் (பிரதம இரசாயன வியலாளர் சீனிக் கூட்டுத்தாபனம், கந்தளாய்), சபாரத்தினம் (மில்க்வைற்), தனலட்சுமி ஆகியோரின் அன்பு சகோதரரும், நாகம்மா இந்திரலீலா, புவனேஸ்வரி, சிவலட்சுமி, நாகரத்தினம் (உரிமையாளர், சாந்தி அச்சகம், யாழ்.) ஆகியோரின் மைத்துனரும், சிவயோகத்தின் பெருமகனும், சசிதரன், விஜிதரன், சக்தி, காயத்திரி, சுகிதரன், ஹரிப்பிரியா, கார்த்திபன், கிருபாலினி, ஜனனி, சயந்தினி ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார். ஈமச்சடங்குகள் இன்று 24ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு மில்க்வைற் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: க. கனகராசா,
உரிமையாளர், மில்க்வைற்.

(C 1180)